Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389

National Tamil Daily தேசிய தினசரி

தபாற் பெட்டி எண் 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது தை 16 ஆம் நாள் றம்ழான் பிறை 2 (29-1-63) செவ்வாய்க்கிழமை 348

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்டஸ்தாபனம்




அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணடி விற்பனையாளரும்
45, மெயின்வீதி, : யாழ்ப்பாணம்.

# பிரதமரை எஸ். ஜே. வி. சந்திப்பார் ?

## பேச்சுவார்த்தைபற்றி கட்சிக் கமிட்டி பரிசீலனை

கொழும்பு, திங்கள்

தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தை பிரதமர் விரைவில் அழைத்துப் பேசக் கூடுமெனத் தெரிகிறது. பிரதமர் அழைத்தால் அந்த அழைப்பை ஏற்றுச் செல்வதா? பிரதமரைச் சந்திக்கும்பொழுது திரு. செல்வநாயகத்துடன் வேறு யார் யார் செல்லவேண்டும்? எந்தெந்த விஷயங்கள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவது போன்ற விஷயங்கள் நேற்று திருக்கோணமலையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய செயற் குழுக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டதாகத் தெரிகிறது. என்றாலும் இது சம்பந்தமாக முடிவு எதுவும் செய்யப்படவில்லை.

மலைநாட்டில் கட்சியின் ஆதரவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இலங்கைத் தொழிலாளர் கழகத்தை வேறும் பல இடங்களுக்கு விஸ்தரிப்பது சம்பந்தமாகத் துரித நடவடிக்கை எடுப்பதென்று கமிட்டி முடிவு செய்திருக்கிறது.

## 19 டிப்போக்களில் பூரண பஸ் சேவை

### இ. போ. ச. அறிவிப்பு

கொழும்பு, திங்கள்

பிலியந்தலை, அவிசாவளை டிப்போக்களைத் தவிர இதர டிப்போக்களில் நிலைமை சீராக உள்ளதென்றும் கடந்த சனிக்கிழமை ஓடிய பஸ்களின் எண்ணிக்கையிலும் பார்க்க இன்று நண்பகல் வரை 209 பஸ்கள் அதிகமாக ஓடின என்றும் இலங்கைப் போக்குவரத்துச்சபை அறிவித்துள்ளது.

நாட்டின் பல இடங்களில் பொலிஸ், ராணுவம் பாதுகாவலின்றி பஸ்கள் ஓடுகிறதென்றும் புத்தளம் டிப்போவில் வழமையான சேவைகள் நடைபெறுகிறதென்றும் இலங்கை போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த 200 ஊழியர்கள் இன்று வேலைக்குத் திரும்பியுள்ளதால் பல இடங்களிலும் பஸ் சேவை நடத்தக்கூடியதாகவிருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை, புத்தளம் டிப்போவைச் சேர்ந்த 7 பஸ்கள் மட்டுமே போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டனவென்றும் இப்பொழுது இப்பகுதிகளில் வழக்கமாக ஓடும் பஸ்களிலும் பார்க்க ஒரு பஸ் அதிகமாக அதாவது 17 பஸகள் ஓடுகிறதென்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள இ. போ. ச. டிப்போக்களில், 19 டிப்போக்களைச் சேர்ந்த பஸகள் பூரண சேவையிலீடுபட்டிருக்கிறதென்றும். பஸசேவையாற்றுத 7 டிப்போக்களில் இப்பொழுது 5 டிப்போக்களைச் சேர்ந்த பஸகள் நியாயமான சேவைபுரிகிறதென்றும் இலங்கைப் போக்குவரத்துச்சபை அறிவித்துள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பல டிப்போக்களைச் சேர்ந்த 'மெக்கானிக்கர்கள்' இப்பொழுது சேவைக்குத் திரும்பியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## ஒன்பது மைல் ஆழக் கிணறு

மாஸ்கோ, ஜன. 28

நிலத்திற்கு அடியில் பரிசோதனை செய்யும் பொருட்டு ஒன்பது மைல் ஆழமுள்ள கிணறு ஒன்றை வெட்ட சோவியத்யூனியன் முயற்சித்து வருவதாக சோவியத் செய்திஸ்தாபனமான 'டாஸ்' அறிவித்துள்ளது,

---

## ஒரே ஒரு அடி! பாம்பு கடித்தவர் கண்ணைத் திறந்தார்

இரத்தினபுரி, திங்கள்

பாம்பு தீண்டியதால் இரண்டு நாட்களாகத் தொடர்ந்து மூர்ச்சையாகியிருந்த ஒருவரை பிரபல பாம்புக்கடி நிபுணர் ஒருவர், ஒரு பலத்த அடிகொடுத்து குணப்படுத்தினர். இரண்டு நாட்களும் ஒரே படுக்கையாய் கிடந்த அந்த நோயாளி அடி விழுந்ததும் ஒரு உலுக்கு உலுக்கி வியப்புடனே எல்லோரையும் விழித்துப் பார்த்தார்!

## நாய் கடிக்கு ஊசிமருந்து ஏற்றுவித்தல் அவசியம்

### மரணவிசாரணை அதிகாரி புத்திமதி

யாழ்ப்பாணம், செவ்வாய்

"தெருக்களில் நடமாடும் நாய்களை சுட்டுக் கொல்ல வேண்டியது பொலிஸாரினதும், ஸ்தலஸ்தாபன அதிகாரிகளினதும் கடமையாக இருக்க வேண்டும். தெருவில் கண்டபடி நாய்களை நடமாடவிடாது பார்த்துக்கொள்வதுடன் நாய் கடித்தால் தடுப்பு ஊசிபோட்டுக்கொள்ளவேண்டும் என்பதனை மக்களுக்கு வற்புறுத்திக் கூறவேண்டியதும் மேலதிகாரிகளின் கடமையாகும்."

யாழ்ப்பாணம் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் இங்கு நடைபெற்ற மரணவிசாரணையொன்றின்போது மேற்கண்டவாறு கூறினர். அவர் மேலும் தெரிவித்ததாவது:- இம்மாதத்தில் பலர் விசர்நாய்க்கடிக்கு பலியாகி இருக்கிருர்கள். நாய்கள் கடித்ததுடன் ஊசி போட வேண்டும் என்பது பெரும்பாலான மக்களுக்குத் தெரியாது. இதனுலேதான் அநியாயமாகப் பலரும் நாய்கடிக்கு இறக்கவேண்டியுள்ளது. நாய் தடுப்பு ஊசிகூட சில சந்தர்ப்பங்களில் பூரண குணம் தராமல்போகலாம். எனவே இதுவிஷயத்தில் தொடர்ந்து சிகிச்சை பெறல்வேண்டும்;

மாதகலைச் சேர்ந்த முத்து நடராஜா (14 வயது) என்னும் சிறுவன் நாய்கடித்தது காரணமாக மரணமானுன். மூன்று மாதங்களுக்கு முன்னர் அச்சிறுவனை நாய்கடித்தது. ஞாயிற்றுக்கிழமையன்று அச்சிறுவனுக்கு வலிக்குணம் ஏற்பட்டது. நேற்றுக் காலை அச்சிறுவன் ஏற்பு வலியால் மரணமானுன். இது சம்பந்தமாக மரண விசாரணை அதிகாரி திரு. எஸ. கனகரத்தினம் விசாரணை நடத்தினர். காலஞ்சென்றவரின் தந்தை முத்தரும் சாட்சியமளித்தார். இயற்கை மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

கிரிக்கெட்

## இங்: 328

### 9 விக்கட்டுகளை இழந்தது

அடிலயிட், ஜன 28

இங்கிலாந்துக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையே அடிலயிட் நகரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நான்காவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் 3-வது நாளான இன்று இங்கிலாந்து கோஷ்டி தனது முதலாவது இன்னிங்சில் ஒன்பது விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 328 ரன்கள் எடுத்தது, போதிய வெளிச்சம் இல்லாத காரணத்திஞல் ஆட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

மழை காரணமாக இன்றைய ஆட்டம் இரண்டுமணிநேரம் நடைபெறவில்லை.

மூன்ருவது கிரிக்கட் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா தனது முதலாவது இன்னிங்சில் 393 ரன்கள் எடுத்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

## "நேரடி பேச்சுக்கள் நடத்த வேண்டும்"

பீக்கிங், ஜன. 28

எல்லைத் தகராறு குறித்து சீனவுக்கும் இந்தியாவுக்கும் விரைவில் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடைபெறலாம் என்று பீக்கிங்கில் இருந்து வெளிவரும் 'பீப்பிள்ஸ் டெயிலி' என்ற பத்திரிகை தனது தலையங்கத்தில் தெரிவித்துள்ளது. எல்லைத் தகராற்றை அமைதியான முறையில் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு சீன - இந்திய நேரடிப் பேச்சுவார்த்தைகள் விரைவில் நடைபெறுமென்று, தாங்கள் மனப்பூர்வமாக நம்புவதாக 'பீப்பிள்ஸ் டெயிலி' தனது தலையங்கத்தில் அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

## 2 சீனருக்கு மேலும் ரிமாண்ட்

கொழும்பு, திங்கள்

இரண்டு லட்சம் ரூபாய் பெறுமதியுள்ள வைரக்கற்களையும், மற்றும் மோசடி செய்யப்பட்ட கள்ள பாஸ்போர்ட்டுகளையும் வைத்திருந்ததாக இலங்கைக்கு விஜயம்செய்த இரு சீனர்கள் கைதுசெய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் இன்று கோட்டை மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைசெய்வதற்குக் கொண்டு வரப்பட்ட போது, இவர்களை அடுத்த மாதம் 5-ம் திகதி வரை மேலும் ரிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

## துக்கதினம் அனுஷ்டிக்க மட்டக்களப்பு நகரசபை முடிவு

மட்டக்களப்பு, திங்கள்

சுதந்திரதினமாகிய பெப்ரவரி நாலாம்திகதி, மட்டக்களப்பு நகரசபைக் கட்டிடத்திலும், நகரசபைக்குச் சொந்தமான கட்டிடங்களிலும் கறுப்புக்கொடி பறக்கவிடவேண்டுமென்னும் தீர்மானம் நகரசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்பேசும் மக்களுக்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லையென்பதை அரசாங்கத்திற்கு எடுத்துக் காட்டும் நோக்கத்துடனேயே இவ்வாறு கறுப்புக் கொடிகளை நாம் பறக்கவிட வேண்டுமென இப் பிரேரணையைக் கொண்டுவந்த திரு. எஸ். கணேசமூர்த்தி கூறினர். திரு. பி. எள். கனகசபை இத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர். திரு. ஜே. எல். திசவீரசிங்கம் கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கிளையின் நிர்வாகசபைக் கூட்டம் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. வர்த்தகஸ்தாபனங்களைப் பூட்டி கறுப்புக் கொடிகளை சுதந்திர தினத்தன்று பறக்கவிடும்படி பொதுமக்களை கேட்டுக்கொள்வதென்று முடிவு செய்யப்பட்டது.

## வரி விளம்பரம்

### அடைவு நகை ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் காங்கேசன் துறைவீதி 207-ம் இலக்ககடையில் சோம. மு. இராமநாதன் அவர்களிடம்1-4-1959 தொடக்கம் 31-12-1960 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை15-2-63வெள்ளிக்கிழமை காலை 10மணி தொடக்கம் மேற்படிகடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர்.
643, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.
21-1-63. 659

### திருமணம்

சுப்பிரமணியம் — ருக்மணி

எங்கள் சகோதரன் திருநிறைச் செல்வன் சுப்பிரமணியத்திற்கும், திரு. வி. நடராசா, திருமதி வி. நடராசாவினதும் புதல்வி திருநிறைச் செல்வி ருக்மணிக்கும் 1963 ஜனவரி 31-ந் திகதி வியாழக்கிழமை இரவு 7—8 மணிவரையுமுள்ள சுபமுகூர்த்தத்தில் மணமகள் இல்லத்தில் (12, பிரப்பங்குளம் வீதி, வண்ணார் பண்ணை) நடைபெறும் திருமணத்திற்கு உறவினரையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

K. A. கனகசபையும்,
(யப்பான்)
675 பாரியாரும்.

### தேவை

'யாழ். சேட்' கம்பனிக்கு, சேட் தைப்பதில் அனுபவம் உள்ள ஆண், பெண் தேவை. 31-1-1963 2 மணிக்கு நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். ஜீவா ரெயிலரிங், 85/3 மெயின், வீதி, யாழ்ப்பாணம். பதிவு எண் 4325.
678

### பண்டித வகுப்புக்கள்

யாழ். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பரீட்சைகளுக்குரிய பிரவேச, பால பண்டித, பண்டித வகுப்புக்கள் நாவலர் வித்தியாசாலையில் 7-2-63 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக்கிழமையும், விடுமுறை காலங்களிலும் நடைபெறும்.

இவ்வகுப்புக்களிற் சேர்கின்றவர்கள் விண்ணப்பங்களை 5-2-63-க்கு முன் தலைமையாசிரியருக்கு அனுப்பலாம்.

இ. திருநாவுக்கரசு,
தலைமையாசிரியர்.
நாவலர் வித்தியாசாலை,
வண்ணார்பண்ணை. 677

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

# அரிசி மோசடி சம்பந்தமாக மற்றொருவர் தேடப்படுகிறார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் அரிசிக் குதத்தில் ஐம்பத்தோராயிரத்து ஐந்நூற்று இருபது ரூபாய் பெறுமதியான 920 மூடை அரிசி மோசடி சம்பந்தமாக மூன்றாவது சந்தேகநபராக ஊர்காவற்றுறையைச் சேர்ந்த இன்னாசிமுத்து ஜோன் என்பவரைப் பொலிஸார் தேடிவருகின்றனர். இவர் சுங்க இலாகா ஏற்றுமதி இறக்குமதிக் கண்ட்ராக்டர் எனத் தெரிகிறது. இவரைக் கைது செய்வதைத் தொடர்ந்து மேலும் சிலர் இந்த மோசடி சம்பந்தமாகக் கைது செய்யப்படலாமெனத் தெரிகிறது. கரையூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. ஈ. ஈஸ் வரபாதம் தலைமையில் இந்த மோசடி சம்பந்தமான புலன் விசாரணை இன்னமும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

யாழ்ப்பாணம் அரிசிக் குதத்திலிருந்து 920 அரிசி மூடைகள் காணமற்போனது சம்பந்தமாக யாழ்ப்பாணம் அரிசிக் குத ஸ்டோர் கீப்பர் நிக்கலஸ் பிள்ளை ஜோசப் என்பவர் கைது செய்யப்பட்டு ரூ. 3000 பிணையிலும், புங்குடுதீவைச் சேர்ந்த சாரதியான விஸ்வலிங்கம் சுப்பிரமணியம் கைது செய்யப்பட்டு ரூ. 500 பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

## மனைவியைக் கொன்றவர் தானும் தற்கொலை செய்தார்

தெரணியகலை, திங்கள்

மீககவலவைச் சேர்ந்த மார்ட்டின் சிங்கோ என்பவர் தனது மனைவியைக் குத்திக் கொலைசெய்த பின்னர், தானும் நஞ்சுண்டு தற்கொலை செய்த பரிதாப சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

இச்சம்பவத்தையொட்டி நடைபெற்ற மரண விசாரணையின்போது கொலை செய்யப்பட்டவரினதும், தற்கொலை செய்தவரினதும் புதல்வி செல்வி. எச். சுமணவதி சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது:-

"சம்பவம் நடைபெற்ற அன்று காலை தாயார் றப்பர் பால் சேகரிப்பதற்காக தோட்டத்திற்குச் சென்றார். அவர் வீட்டைவிட்டுச் சென்ற சிறிது நேரத்தில் அழுகைக் குரல் கேட்டது. இதைத் தொடர்ந்து நானும் எனது சகோதரர்களும் அவ்விடத்துக்கு ஓடிச் சென்றோம். அப்பொழுது எங்கள் தந்தையார் தாயாரை கத்தியால் குத்திக்கொண்டிருந்தார். நான் கதறினேன். அவர் உடனே போத்தலில் இருந்த ஒரு பாணத்தை சிரட்டை ஒன்றில் ஊற்றி உட்கொண்டார். உடனேயே அவர் மரணமானார். தாயாரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம். அவரும் மரணமானார்."

இருவருக்குமிடையில் அடிக்கடி சண்டை ஏற்படுவதாக விசாரணையின்போது தெரிய வந்தது.


சரித்திரம் வெளிவந்துவிட்டது!

ஆதிகாலம் — மத்தியகால

இலங்கைச் சரித்திரம்

எச். எஸ். சி. (H. S. C.) பல்கலைக்கழக புகுமுக வகுப்புகளுக்குரியது.

ஆக்கியோன்: திரு. வ. மகாலிங்கம் B. A. (Ceylon)

விலை 2 50

பதிப்பாளர்:
ஸ்ரீகாந்தா அச்சகம் — புத்தகசாலை
13, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.


ஆசிரியருக்குக் கடிதம்

## டட்லி- சிறிமாவோ சந்திப்பு

எதிர்க் கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா, முதல் அமைச்சர் ஸ்ரீமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்துப் பேசியிருப்பது நமது இன்றைய தேச நிலையில் வரவேற்கத் தகுந்த ஒரு நிகழ்ச்சியாகும்.

சர் ஜோன் கொத்தலாவலை முதலமைச்சராயிருந்த நாளில் இலங்கை-இந்தியப் பிரச்னை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த இந்தியாவுக்குப் பிரயாணமானபோது காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவைத் தன்னோடு வருமாறு அழைத்தார். திரு. பண்டாரநாயக்கா அவர் அழைப்பை ஏற்று சர் ஜோன் கொத்தலாவலையுடன் சேர்ந்து புதுடில்லி சென்றார். அதற்குப் பிற்பாடு அதுமாதிரி நல்லுறவையும் நல்லிணக்கத்தையும் வெளிப்படுத்தும் சுப சூசகமானதொரு நிகழ்ச்சி இலங்கையில் பாராளுமன்ற ஆட்சி ஏற்பட்டது முதல் நிகழ்ந்திருப்பது இப்பொழுதுதான். இது சாதாரண உபசார சம்பிரதாயமானதொரு சந்திப்பல்ல. அதற்கும் மேற்பட்டதொரு நிகழ்ச்சி. பத்திரிகை அறிக்கைகளின்படி, இரண்டு பேரும் நீண்ட நேரம் கலந்துரையாடியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. உள் நாட்டுப் பிரச்னைகளுக்கும் இலங்கை சம்பந்தப்பட்ட வெளித்தேச விவகாரங்களுக்கும் இந்தச் சந்திப்பும் பேச்சும் ஏதோ ஒரு வழியில் உதவக் கூடும். வருங்காலம் நல்லபடியாக அமையுமென்றே எதிர்பார்ப்போம். மேலும் காலஞ்சென்ற முதலமைச்சர் ஸ்ரீ பண்டாரநாயக்காவும், திரு. டட்லி சேனநாயக்காவும் பல பொதுப் பிரச்னைகளில் உடன்பாடான எண்ணம் உள்ளவர்களாய் இருந்திருக்கிறார்கள். தவிர, இரு பேரும் நல்ல மனப்பான்மையுடனேயே பழகி வந்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

ஆகவே, இன்று நாட்டில் நிலவிவரும் மனக்கசப்பு, துவேஷம் போன்ற தீமைகள் அனைத்தும் ஒழிந்துபோக டட்லி-சிறிமாவோ சந்திப்பு ஒரு வழி வகுக்கவேண்டுமெனப் பிரார்த்திப்போம்.

எஸ்.சிவசுப்பிரமணியம்
கொழும்பு

## "முன்னேற்றத்துக்கு உழைக்க வேண்டும்"

வட்டுக்கோட்டை, திங்கள்

"சனசமூக நிலையங்கள் சமூக முன்னேற்றத்திற்கான சகல பணிகளிலும் ஈடுபட்டுழைக்க வேண்டும். குறிப்பாக அவை கிராமியக்கலைகளை வளர்ப்பதிலும் கிராமிய இலக்கியங்களைப் பாதுகாப்பதிலும் தீவிர கவனம் செலுத்தவேண்டும். சமூக முன்னேற்றமொன்றையே நமது தலையாய இலட்சியமாகக் கொண்டுசெயலாற்ற வேண்டும்"

இவ்வாறு யாழ்-மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசச் செயலாளர் திரு. த. துரைசிங்கம் வட்டுக்கோட்டைக் கிராமசபைமண்டபத்தில் நடைபெற்ற சனசமூக நிலையப் பிரதிநிதிகளது மகாநாடென்றில் பேசுகையில் குறிப்பிட்டார். கிராமசபை உபதலைவர்கள் திரு. கே. செல்வராசன் இம் மகாநாட்டுக்குத் தலைமைவகித்தார்.

ஆசிரியர் திரு. ச. நடராசா பேசுகையில், யாழ்ப்பாண மாவட்ட ச்னசமூக நிலையங்களின் சமாசம் அண்மைக் காலமாகச் செய்துவரும் சேவைகள் பாரட்டற்குரியன வென்றார். வலிகாமம் மேற்கு சனசமூக நிலையங்களின் விழாச்சபைத் தலைவர் திரு. மு. சதாசிவம், செயலாளர்: திரு. வ. மெ. தங்கராசா ஆகியோருட்பட வேறு பலரும் பேசினர். சமாச உப விழா பற்றியும் நிலையங்களின் முக்கிய தேவைகள் பற்றியும் இம்மகாநாட்டில் ஆராயப்பட்டது.

# செய்தித்திரட்டு

## சமாஜக் கட்டிடம்

மட்டக்களப்பு, திங்கள்

மட்டக்களப்பு மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச்சங்கசமாஜத்தின் ஆதரவில் சுமார் ஒன்றரைலட்சம் ரூபாய் செலவில் கட்டிமுடிக்கப்பட்டகூட்டுறவு சமாஜக் கட்டிடத் திறப்புவிழா சனிக்கிழமை மாலை நடைபெற்றது. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. திலக். இ. குணரத்ன, சம்பிரதாய முறைப்படி நாடாவை வெட்டி கட்டிடத்தைத் திறந்துவைத்தார். திறப்பு விழாவை அடுத்து நடைபெற்ற கூட்டத்திற்கு திரு. கே. டபிள்யு. தெய்வநாயகம் தலைமைவகித்தார். கூட்டுறவுக் கமிஷனர் திரு. திலக். இ குணவர்த்தன, சிரேஷ்ட கமிஷனர் திரு. ஆர். இராசரத்தினம், ம. மா. கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. வி. கனகசபை ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

## மீண்டும் மழை

மட்டக்களப்பு மாவட்டம் முழுவதிலும் மீண்டும் பெருமழை பெய்ய ஆரம்பித்துள்ளது. கடந்த ஒரு வாரமாக தொடர்ந்து விடா மழை பெய்த வண்ணமிருப்பதால் இப் பகுதி மக்கள் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகவேண்டி ஏற்பட்டுள்ளது. சில வாரங்களுக்கு முன்பு இப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் தொடர்ந்து பெருமழை பெய்ய ஆரம்பித்ததும், மறு வெள்ளம் ஏற்பட்டுவிடுமோ என அஞ்சுகின்றனர்.

## வித்தியாதரிசி

மட்டக்களப்பு தெற்கு வட்டார வித்தியாதரிசியாக திரு. பி. சின்னத்துரை நியமிக்கப்பட்டுள்ளார். இப் பகுதி வித்தியாதரிசியாகக் கடமையாற்றிய திரு. ஜே. எம். சீமான் பிள்ளை வடமாகாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து கடந்த பல மாதங்களாக இப் பகுதிக்கு ஒரு வித்தியாதரிசி இல்லாமலிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## களவு!

திருக்கோணமலை, திங்கள்

பெரிய கிண்ணியா ஒன்பதாம் வட்டாரத்தில் வசிக்கும் ஜனாப் அப்துல்காதர் வல்தாவியார் என்பவர் வீட்டில் வெற்றிலைத் தட்டம், மேலங்கிகள், சேலைகள், தங்க நகைகள் முதலியன திருடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. எவரும் கைதுசெய்யப்படவில்லை. அண்மையில் இதுபோல் பல களவுகள் கிண்ணியாவில் நடைபெற்றுள்ளன.

## மாட்டுவண்டிப்போட்டி

மாட்டுப் பொங்கலை முன்விட்டு தம்பலகமம் புதுக் குடியிருப்பு வீதியில் தம்பலகமம் கிராமசபைத் தலைவர் திரு. சு. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற மாட்டுவண்டி சவாரிப் போட்டி ஒன்றில் திரு. கணபதிப்பிள்ளை என்னும் வாலிபருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இப் போட்டியில் ஏராளமான வண்டிகள் பங்கு பற்றின.

## முஸ்லிம்கள் தயார்

"தாய்மொழியான தமிழுக்கு உரிமை பெறும் விஷயத்தில் எக்கட்சி செயல் அளவில் பாடுபடுகிறதோ அதோடு சேர்ந்து பாடுபட கிண்ணியா முஸ்லிம் மக்கள் என்றென்றும் தயாராக உள்ளனர் என்பதை அக் கட்சியினர் மறந்துவிடக் கூடாது" என்று கிண்ணியா தமிழ்பேசும் வாலிப முன்னணியின் கூட்டத்தில் பேசுகையில் செயலாளர் ஜனாப் வாப்பு ராஜா கூறினர். கூட்டம் அதன் தலைவர் ஜனாப். யு. ஆமாத் தலைமையில் நடைபெற்றது.

## இன்னும் 'முன்னேறக்கூடும்'

கிண்ணியாவைப் பட்டினசபைக்கு உயர்த்துவதுபற்றி மூதூர்த் தொகுதியின் இரு எம்.பி.க்களானஜனாப் ஏ. எல். ஏ. மஜீத்திடமும், ஜனாப் எம். ஈ. எச். முகமதலியிடமும் ஸ்தலஸ்தாபன அலுவலகமும், திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டி. எம். ஏ. ஸ்பெல்ட்வின்ட்டும் அபிப்பிராயம் கேட்டபோது, இதை நிர்ணயிக்க வேண்டியவர்கள் பொதுமக்களே என்றும், கிண்ணியா இன்னும் நன்ருக முன்னேறிய பின்னர் அதைப் பட்டினசபை ஆக்கினால் நல்லது என்றும் தெரிவித்துள்ளனர்.

## சமயப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கைப் பொது ஜனசேவைச் சங்க சமயப்பிரசார சபையின் ஆதரவில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நல்லூர் தேவஸ்தான சண்முக தீர்த்த மண்டபத்தில் ஸ்ரீமத் வி. எஸ். எஸ். மணிபாகவதர் தலைமையில் ஸ்ரீமத் ஜெகதீஸ்வரி தங்கக்கணபதி 'இறையருளும் ஆன்மாவின் மறுபிறப்பும்' என்னும் பொருள்பற்றி ஓர் பிரசங்கம் செய்தார். வருகிற வெள்ளியன்று செல்வி லோகாம்பாள் சுப்பையாவின் பிரசங்கம் நிகழவிருக்கிறது.

## 'சோஷலிஸத்தை விரும்பவில்லை'

மைபிட்டியா, திங்கள்

'சோஷலிஸத்தை வளர்க்கத் தாம் விரும்பவில்லை என்பதை அரசாங்கம் நிரூபித்துவிட்டது. மக்களை தவறான வழியில் கொண்டு செல்ல எத்தனிப்பதும், பொய்களைப் பரப்புவதும் இதற்கு சான்றாகும்.'

இவ்வாறு இங்கு நடைபெற்ற கூட்டமென்றில் பேசிய வெலிமடை எம். பி. கே. எம். பி. ராஜரத்ன குறிப்பிட்டார். கியூபாவிலிருந்து இலங்கை வந்திருக்கும் விவசாயியான திரு. பிரட்ரிக் லூயிஸ் என்பவரை வரவேற்கும் முகமாக கஸ்கொடவில்ல வாலிபர் கழக ஆதரவில் இக்கூட்டம் நேற்று நடைபெற்றது.

கியூபா போன்ற சிறிய நாடு ஏகாதிபத்தியத்தை ஒழித்துக் கட்டிவிடும் போது இலங்கையிலே அப்படிச் செய்ய முடியாது என்று சொல்வது மிகவும் விந்தையாகுமென்று மக்களிடையே இருக்கும் ஒற்றுமையின்மையே இதற்கு காரணமென்றும் திரு. ராஜரத்ன மேலும் குறிப்பிட்டார்.

தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசிய திரு. லூயிஸ், கியூபாவில் தொழிலாளிகளும், விவசாயிகளும் ஏகாதிபத்தியத்தை எதிர்பதற்கு அஞ்சவில்லையென்றும் சோஷலிஸத்தை நிலைநாட்ட வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்ததால் தங்களால் ஒரு சோஷலிச நாட்டை உருவாக்க முடிந்ததென்றும் குறிப்பிட்டார்.

# நடுநிலைமைக் கொள்கையைக் கைவிடக் கூடாது

## காங்கிரஸ் பார்லிமெண்டரி குழுவில் நேரு விளக்கம்

### கலை நிகழ்ச்சியில் ரூ. 2 லட்சம் வசூல்

புதுடில்லி, ஜனவரி 28

"இந்தியா தனது நடுநிலைமைக் கொள்கையைக் கைவிட்டால் அது தனது அடிப்படை நோக்கங்களையே கைவிடுவதாகும்" என்று பிரதமர் நேரு நேற்று காங்கிரஸ் பார்லிமெண்டரிக் குழுக் கூட்டத்தில பேசுகையில் கூறினர். நடுநிலைமைக் கொள்கையின் அவசியத்தை வலியுறுத்திப் பேசிய பிரதமர் நேரு, வீரமும், தைரியமும் கொண்ட பாரதம் ஒரு நாளும் அடிப்பணியப் போவதில்லையென்றும் ஆயுதங்களின் பலத்தைவிட அடிபணியாத் தன்மையும் தன்னம்பிக்கையும்தான் அவசியமென்றும் கூறினர். இதர கம்யூனிஸத்தைவிட சீனவின் கம்யூனிஸம் அலாதியானதென்றும் நேரு கூறினர்.

### கம்போடியா உதவிசெய்யும்

இந்திய — சீன எல்லைத் தகராறு சமாதானமாகவும் நியாயமாகவும் தீர்வதற்கு கம்போடியா தன்னலானதைச் செய்யும் என்று கம்போடிய இளவரசர் நொரடம் சிகானுக் நேற்று ஒரு வைபவத்தில் பேசுகையில் கூறினர். கம்போடியாவுக்கும் இந்தியாவுக்குமுள்ள உறவுபற்றி இளவரசர் சிகானுக் குறிப்பிட்டு இந்தியாவை கம்போடிய மக்கள் தங்கள் தாய்நாடாகவே கருதுகிறர்களென்றர்.

### நேபாள — இந்திய உறவு

இந்தியாவில் பதினொரு தினங்கள் சொந்த முறையில் தங்கியிருந்த நேபாள மன்னர் மகேந்திரரும் ராணியும் நேற்று காட்மாண்டு திரும்பினர். லக்ஷ்மணபுரி விமான நிலயத்தில் நிருபர்களின் கேள்விகளுக்கு மன்னர் பதிலளிக்கையில் இந்திய — நேபாள உறவு அபிவிருத்தியடைந்துவருவதாகவும் இந்தியாவுக்கும் நேபாளத்திற்கும் கருத்து வேற்றுமை அவ்வளவு பெரியதாக இல்லையென்றும் கூறினர். பார்லிமெண்டரி அரசியல் அமைப்பு மீண்டும் நேபாளத்தில் ஏற்படுமென்றும் இவ்வருடம் ஏப்ரல் மாதம் முதல் தேசிய பஞ்சாயத்து அமைக்கப்படுமென்றும் மன்னர் தெரிவித்தார்.

### சீனர் விருப்பம்பற்றி நேபாள மந்திரி

பீக்கிங்கிலிருந்து காட்மாண்டுவுக்குத் திரும்பும் வழியில் கல்கத்தாவில் தங்கிய நேபாள வெளிவிவகார மந்திரி திரு. துல்சிகிரி, நிருபர்களிடம் பேசுகையில், எல்லைப்பிரச்னையில் இந்தியாவுடன் ஒரு சமரச உடன்பாட்டுக்கு வருவதற்கு சீனர் ஆர்வம்கொண்டிருப்பதாகக் கூறினர். 'எவரெஸ்ட்' சிகரம் என்ற பிரிட்டிஷ் அதிகாரியின் பெயரை இமயமலைக்கு வழங்கப்பட்டுவருவதைத் தாம் விரும்பவில்லையென்றும் "சாகர் மாதா" என்றுஅதற்குத் தாம் பெயர்சூட்டியுள்ளதாகவும் டாக்டர் கிரி கூறினர் 'சாகர் மாதா' நேபாளத்துக்கே உரியதென்றும் சிகரத்தில் ஏறவிரும்புபவர்கள் தெற்குப் பகுதியாக ஏறவிரும்பினல் நேபாள அரசாங்கத்திடமும் வடக்குப் பகுதியிலிருந்து ஏறவிரும்பினல் சீன அரசாங்கத்திடமும் அனுமதிபெறவேண்டும் என்றும் டாக்டர் கிரி கூறினர். கொழும்பு மகாநாட்டு யோசனைகளை சீன அப்படியே ஏற்றுக்கொள்ளாததால் அதை சீன நிராகரித்துவிட்டதென்று கருதக்கூடாதென்றும் இந்தியாவுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தவே சீன விரும்புகிறதென்றும் டாக்டர் கிரி கூறினர்.

### தங்க விலையை குறைப்பதே நோக்கம்

இந்தியாவில் தங்கத்தின் உற்பத்திச் செலவைக் குறைத்து தங்கத்தின் விலையையும் குறைக்க அரசாங்கம் முயற்சிசெய்யும் என்று நிதிமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் கூறினர். கோலார் தங்கச் சுரங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் திரு. தேசாய் நேற்றுப் பேசுகையிலேயே இவ்வாறு கூறினர்.

### காந்தீய தத்துவப் பிரிவு

காந்தீய தத்துவத்தை வருங்கால சந்ததியினர் தெரிந்துகொள்வதற்காக ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் காந்தீய தத்துவப் பிரிவு ஒன்று நிறுவப்படவேண்டுமென்று கேரள கவர்னர் திரு. வி. வி. கிரி யோசனை தெரிவித்தார்.

### தமிழ்நாட்டில் ஆயுர்வேத வைத்திய கல்லூரி

தமிழ்நாட்டில் சித்த ஆயுர்வேத, யூனனி வைத்தியக் கல்லூரி ஒன்று நிறுவப்படவிருப்பதாக தமிழ்நாடு சுகாதார மந்திரி திருமதி ஜோதி வெங்கடாசலம் நேற்றுத் தெரிவித்தார். மேற்கத்திய வைத்திய முறைகளுடன் இந்திய வைத்திய முறைகளைக் கலந்தால் இந்திய வைத்தியமுறை இறுதியில் அழிந்துபோய்விடுமென அவர் கூறினர்.

### கலை நிகழ்ச்சியால் ரூ. 2 லட்சம் வசூல்

புதுடில்லியில் நேற்று மாலை நடைபெற்ற கலாசாலை நிகழ்ச்சியுடன் குடியரசு தின விழா தலைநகரில் முடிவடைந்தது. பிரபல வட இந்திய சினிமா டைரக்டர்கள், இசை அமைப்பாளர்கள், பின்னணிப் பாடகர்கள் ஆகியோரும் பிரபல நடிகர்களான திலிப்குமார், ராஜ் கபூர், தேவ் ஆனந்த் ஆகியோரும் கலந்துகொண்ட இந்த நிகழ்ச்சியினல் தேசிய பாதுகாப்பு நிதிக்கு இரண்டு லட்சம் ரூபாய் கிடைத்தது. இந்தக் கலை நிகழ்ச்சியை ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், பிரதமர் நேரு மற்றும் மந்திரிகளும் கண்டு களித்தனர்.

---

## கியூபாவில் சதித்திட்டம் அம்பலம்; பலர் கைது

ஹவான, ஜன. 28

கியூபா அரசாங்கத்தைக் கவிழ்க்கவும் கியூபாவின் உதவிப் பிரதமரும் ராணுவ மந்திரியும் பிரதமர் பிடல் காஸ்ட்ரோவின் சகோதரருமான காஸ்ட்ரோவைக் கொலை செய்யவும் சதிசெய்ததாக கியூபாவில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஹவான ரேடியோ அறிவித்தது. கியூபாவில் சூழ்ச்சி வேலைகளிலும் உளவு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்த இரு அமெரிக்க இயக்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டதாகவும் இந்த இயக்கங்களே சதிவேலைகளுக்கு காரணமென்றும் ஹவான ரேடியோ தெரிவித்தது. வேவு நடவடிக்கைகளுக்கு உபயோகப்படுத்தப்பட்ட பலகருவிகளும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டனவாம்.

---

## 'மொழி அடிப்படையில் போராடினல் வெற்றி'

### எழுத்துவினைஞர் சங்கக் கூட்டத்தில் பேச்சு

திருக்கோணமலை, திங்கள்

"தமிழ் பேசும் தொழிலாளர்கள் மொழி வழி ஒன்றுபட்டு தங்களது உரிமைகளை பெற போராட வேண்டும். மொழிவழி பிரிவினையை ஒதுக்கி வர்க்க ரீதியில் தொழிற் சங்கங்கள் இயங்குவதினல் தமிழ் பேசும் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளை இழக்க வேண்டி நேரிடுகிறது. அரசாங்க எழுதுவினைஞர்கள் சான் முதன் முறையாக மொழிவழி தொழிற்சங்கம் அமைத்து உரிமைகளுக்காகப் போராடுகின்றனர். இதனல் எமது சங்கம் சங்க உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாது பொது மக்கள், தமிழ் பேசும் தொழிலாளர்கள் அத்தனை பேருக்கும் நம்பிக்கை ஒளிவீசும் நிறுவனமாக அமைந்திருக்கிறது. எனவே தமிழ் பேசும் தொழிலாளர்கள் அனைவரும் மொழி அடிப்படையில் ஒன்று பட்டு தங்களது உரிமைகளைப் பெற போராடினல் நிச்சயம் அவர்களுக்கு வெற்றி கிடைக்கும்" என எழுதுவினைஞர் சங்கக் கூட்டத்தில் சங்கப் பிரமுகரான திரு. செ. கோடிஸ்வரன் பேசுகையில் கூறினர்.

இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு திரு. ரி. பாலசிங்கம் தலைமை தாங்கினர். செயலாளர் திரு. சிவலிங்கம் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தார் பின்னர் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. பி. பாலசிங்கம், செயலாளர், பொருளாளர்: திரு. த. குலவீரசிங்கம், திருவாளர்கள்: அரசரத்தினம், பஞ்சாட்சரம், சிவலிங்கம், கணேசன், இராஜதுரை, சுந்தரமூர்த்தி ஆகியோர் செயலவை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். இறுதியில் சிற்றுண்டி வைபவம் நடைபெற்றது.

---

## பாடசாலை நிர்வாகத்தில் ஆசிரியருக்கும் இடம்

### கல்வி அமைச்சை வடமாகாண ஆசிரியர் சங்கம் கோரும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் 47-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் பெப்ரவரி மாதம் 2-ம் திகதி தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

பின்வரும் தீர்மானங்கள் உட்பட பல தீர்மானங்கள் இக் கூட்டத்தில் கொண்டு வரப்படவிருக்கின்றன:-

ஆசிரியர்கள் நியமனம் இடமாற்றம சம்பந்தமான தேசிய கல்விக் கமிஷனின் சிபார்சுகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதோடு பாடசாலைகளை நடத்துவதற்கு ஆசிரியர்களைப் பிரதிநிதித்துவம் கொண்ட சபையொன்றையும் உடனடியாக நியமிக்கும்படி கல்வி அமைச்சைக் கேட்டுக் கொள்வது.

ஆசிரியர்கள் வேலைநேரம் அதிகரிக்கப் பட்டுள்ளதால் ஆசிரியர் தொழில் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகையால் தலைமையாசிரியர் உதவியாசிரியர்களுக்கு வகுத்தளிக்கும் வேலை விபரத்தை கட்டுப்படுத்தவேண்டும்.

ஆசிரிய சங்கங்களின் ஆலோசனை பெருது செய்யப்பட்ட கல்வி ஆலோசனைக் கவுன்சில் நியமனத்தை வன்மையாகக் கண்டிப்பதோடு ஜனநாயகத்திற்கு முரணை இந்நியமனத்தைக் கைவிட்டு, ஆசிரியர் சங்கம் பிரதிநிதிகளை நேரடியாகத் தெரிவுசெய்ய வேண்டும்.

போறுப் பேற்றபாடசாலை ஆசிரியர்களின் சம்பள உயர்வைக் காரணங் காட்டாது நிறுத்தியதை இந்தச் சங்கம் வலமாக ஆட்சேபிக்கிறது.

246 பிரிவைக் கொண்டு பொறுப்பளிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்களின் அரசியலுரிமையை இல்லாமற் செய்வதையிட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

---

### 'சங்கீதம் கைவருவதற்கு பூர்வ புண்ணியமும் வேண்டும்'

யாழ்ப்பாணம், திங்கள்

"சங்கீதம் மற்றெல்லாக் கலையிலும் பார்க்க மகத்துவமும் தெய்வத்தன்மையும் வாய்ந்ததாகும். இக்கலையில் பாண்டித்தியம் பெற பூர்வபுண்ணியமும் வேண்டும்."

யாழ்ப்பாண ரஸிக ரஞ்ஜன சபாவின் சார்பில் பெருமாள் கோவிலடி அரசினர் பாடசாலையில் நடைபெறும் சங்கீத வகுப்பில் இசைகற்கும் மாணவர்களிடையே உரைநிகழ்த்திய சபாவின் முன்னள் உபதலைவர் இசைப்புலவர் திரு. சி. செல்லத்துரை மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது:-

இசைகற்கும் மாணவர்களிடையேயும் அவர்களின் பெற்றோர்களிடையேயும் ஒரு தவறுன எண்ணம் நிலவுகின்றது. கெதியாக கீர்த்தனம் பாட வேண்டும். மேடைக்கச்சேரி செய்யவேண்டும். வானெலியிலும் கெதியாகப் பாடவேண்டுமென்று அவசரப்படுகின்றனர். இப்படி அவசரப்பட்டுப் போவதால் இசைக்கலையில் பூரணதேர்ச்சியடைய முடியாது மேற்பாடங்களை எளிதில் கற்கவும் முடியாது. அறியாத பெற்றோர்களுக்கு மாணவர்களாகிய நீங்கள் இவற்றை சொல்ல வேண்டும்.

ஒரு வீட்டுக்கு அத்திவாரம் எவ்வளவு பெலமடையவேண்டுமோ, அவ்வளவு சங்கீதங் கலை கற்பதற்கு அத்திவாரப் பாடங்களாகிய ஸ்வரவரிசைகள், அலங்காரங்கள், கீதம் வர்ணம் என்பன பலகாற் பயிற்சியால் பூரணஸ்திரமடைய வேண்டும். அவை ஸ்திரமடைந்தால் தான் மேற் பாடங்களாகிய கீர்த்தனம் இராகம், தானம், பல்லவி, கற்பனஸ்வரங்கள் என்பனவற்றை நீங்களே நன்கு அறிந்து கொள்ள முடியும்.

### மணி வாக்கு

மனிதகுல மனைத்தும் ஒன்றே. ஒழுக்க நெறிகளுக்கு எல்லாரும் சமமாகக் கட்டுப்பட்டவர்கள் ஆண்டவன் முன்னிலையில் எல்லாரும் சமமே. சாதி, அந்தஸ்து முதலிய வேற்றுமை இருக்கலாம் ஆனால் அந்தஸ்தில் எவ்வளவு உயர்ந்திருக்கிருரோ, அவர்களுக்குப் பொறுப்பும் அதிகமாகும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELANADU. National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு
தை மீ 16 உ (29-1-63)


## மதுக் கொள்கை

பொலன்னறுவையில்கூடிய பௌத்த காங்கிரஸிலே மதுக் கொள்கையைப்பற்றி கருத்து வேற்றுமைகள் தெரிவிக்கப்பட்டன. விவசாய அமைச்சர், மதுவிலக்குக் கொள்கையை எதிர்த்துப் பேசினுர். தென்னை பனை, கித்துல் முதலியன இருக்கும்வரை சர்க்கரையும் கிடைக்கும்வரை கசிப்பும் கள்ளச்சாராயமும் உற்பத்தி செய்யப்படுமென்றும் தாம் மதுபானம் அருந்தாவிடினும் மதுபானம் செய்ய விரும்புபவரைத் தாம் தடுக்க விரும்பவில்லை என்றும் சொன்[illegible] அமெரிக்கா மதுவிலக்கைப் பரீட்சித்து, அதைக் கைவிட்டதென்றும், இந்தியாவிலும் அது வெற்றிபெறவில்லை என்று தாம் அறிவதாகவும் கூறி, இந்த உண்மைநிலையை உணர்ந்தே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இதற்கான கொள்கையை வகுக்கப் பார்லிமெண்ட் விசேஷ கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறதென்றும் தெரிவித்தார்.

அதே காங்கிரஸில் பேசிய ஒரு மகாநாயகதேரோ அரசாங்கத்தின் மதுக் கொள்கையை ஒப்பவில்லை கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கு அரசாங்கமே உயர்தர சாராயம் காய்ச்ச வேண்டுமென்ற கொள்கையைத் தாம் ஏற்கவில்லை என்ருர். யு. என். பி. அரசாங்கமும் பெரிய பண்டாரநாயக்காவின் அரசாங்கமும் மதுவிலக்கையே அரசாங்கக் கொள்கையாக ஒப்புக்கொண்டதாகவும், இப்போதைய அரசாங்கம் இதுபற்றி ஏன் ஒரு விசேஷ கமிட்டியை நியமிக்க வேண்டுமென்ற காரணம் தமக்குப் புரியவில்லை என்று வாதித்தார்.

மதுவிலக்குப்பற்றிப் பலத்த கருத்து வேற்றுமைகள் இருப்பது புதிதன்று. இந்தியாவிலும்கூட இவ்வேற்றுமை இருக்கவே செய்கின்றது. ஆனல் மதுபானம் பஞ்சமாபாதகங்களில் ஒன்றென உபதேசித்த புத்தர்பிரானின் கோட்பாடுகளை நிறைவேற்ற வேண்டிய பௌத்த காங்கிரஸில் ஒருமந்திரி இதற்கு மாருகப் பேசியது சரியாகுமா? குடியால் நாட்டிலே ஏற்படும் கேடுகளையும் நல்ல குடும்பங்கள் பல குட்டிச்சுவராவதையும் அறிந்தும், குடிக்க விரும்புகிறவர்களைத் தடுக்கத் தாம் விரும்பவில்லை என்று மந்திரி கூறுவது விபரீதமாகும். பணச் சங்கடத்தில் சிக்கியுள்ள அரசாங்கம் இக்கொள்கையை அமுலுக்குக் கொண்டுவருமென எதிர்பார்ப்பதற்கில்லை தான். சிறப்பாக பௌத்தபிக்குகள் இதுபற்றி தீவிரபிரசாரம் செய்ய முற்பட்டால், மது அரக்கனின் தீங்குகள் இங்கு குறையவும், அரசாங்கமும் மனம்மாறி, இந்தியாவைப் பின்பற்றி இங்கும் மதுவிலக்கைத் துணிச்சலுடன் அமுல் நடத்தவும் முன்வரக்கூடும்.

# இந்தியாவின் பாதுகாப்பு
## பலமுனைகளிலும் விருத்தியுற வேண்டும்

மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் சீன அணுசக்தியைப்பெற்றுவிடக்கூடும். எனவே, அணுகுண்டுகளை உற்பத்தி செய்யவேண்டிய அவசியம் இந்தியாவுக்கும் ஏற்படுகின்றது.

இந்தியாவின் எல்லைப் புறத்தில சீனர்களின் ஆக்கிரமிப்பு நடந்தேறிய தினத்திலிருந்து மேல்நாட்டு அரசியல் அறிஞர்கள் இவ்வாக்கிரமிப்பு நடந்திருக்க வொட்டாமல் இந்திய அரசாங்கம் முன்கூட்டியே பாதுகாப்புத் துறையில் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று குறைகூறுகின்றனர். உதாரணமாக, திபேத்தை ஒரு நடுநிலைமை வகிக்கும் நாடாக இயங்க வைத்திருக்கவேண்டும் என்றும், இமயமலை எல்லைச் சாரலில் மலைப்பிரதேசங்களில் போர் புரியும் திறன்பெற்ற துருப்புக்களை அனுப்பி ரோந்து சுற்றச் செய்திருக்கவேண்டும் என்றும், இந்தியா கூட்டுசேரா மனப்பான்மையைக் கைவிட்டிருத்தல்வேண்டும் என்பனவும் அவர்களின் குற்றச்சாட்டுகளிற் சில இந்தியா சுதந்திரம்பெற்ற தினத்திலிருந்து 'உலக சமாதானத்திற்கு எவ்விதமான இன்னல்களும் விளைக்கக்கூடாதென்று நோக்கம்கொண்டு செயல்பட்டதும், சீன ஐக்கிய நாட்டுச் சபையில் ஓர் அங்கத்தினராக இடம்பெறப்பட்டதும் இந்தியாவின் பளிங்குபோன்ற கபடமற்ற உள்ளத்திற்குப் பெரிய எடுத்துக்காட்டுகளாகும்.

தன்னுடைய களங்கமற்ற உள்ளம் போலவே பிறநாடுகளின் உள்ளங்களும் இருக்குமென்று எதிர்பார்த்த இந்தியா பெரிய ஏமாற்றமடைந்துவிட்டது.

### விழிப்பு

இப்பொழுது கண்ட அனுபவத்திலிருந்து விழிப்பு ஏற்பட்டு பல துறைகளில் இந்தியா ஆவேசத்துடன் முன்னேற வகுத்திருக்கும் திட்டங்களிலிருந்து மீண்டும் ஆக்கிரமிப்பு தலையெடுத்தால் அவ்வாக்கிரமிப்பு ஒரு நொடியில் நசுக்கப்படுமென்று கூறின் அது மிகையல்ல.

பிரிட்டிஷார் அக்காலத்தில் பாதுகாப்புக்கு வேண்டிய இராணுவங்களைத் திரட்டிப் பயிற்சிகள் அளித்து அவைகளின் முழுப் பலத்தையும் இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புறத்தில் பரவலாக வைத்திருந்தார்கள். ஏனெனில் இந்தியாவுக்கு ஏற்பட்ட பல அன்னியர்களின் ஆக்கிரமிப்பு அத்திகதியிலிருந்து தான் தலையெடுத்தன. பிரிட்டிஷார்கள் நாட்டைவிட்டகன்றதும் அவர்கள் நிர்வகித்த இராணுவம் இரண்டாகப் பிரிந்து ஒரு பகுதி நம் நாட்டிலும் மற்ருெரு பகுதி பாகிஸ்தானத்திலும் இயங்கத்தொடங்கிற்று. அந்நாட்களில் சீன பலமற்ற ஒரு நாடாகத் திகழ்ந்ததினல் பிரிட்டிஷ் நிர்வாகம் ரஷ்யாவினிடம் அவநம்பிக்கை கொண்டு இந்தியாவின் வடமேற்கு முனையில் இராணுவத்தை பலப்படுத்தியது என்றும் திபேத், நேபாளம், ஆப்கானிஸ்தான், பாரசீகம், இந்தியநாடுகளை எல்லைச் சச்சரவை தடுப்பதற்காக உபயோகித்தது என்றும் கூறப்படுகிறது. பிரிட்டன் இந்தியாவைக் கைப்பற்றியது கடல் வழியாக ஆனதால் வேறு ஒரு நாடும் அவ்வழியை அதே லட்சியத்திற்கு உபயோகிக்கக் கூடாதென்று கேப்டவுனிலிருந்து ஏடன், சிங்கப்பூர் வழியாக ஆஸ்திரேலியாவரைகடற்படை தளவாடங்களை நிறுவி இந்தியாவை கடற்படை கொண்டு பாதுகாத்தது. பிரிட்டனுக்குப் பிறகு இவ்வகைப் பொறுப்புக்களை இந்தியா ஏற்றுக்கொள்ள இருந்த போதிலும் காஷ்மீர் பிரச்னையின் காரணத்தால் அவ்வளவு அத்திக்கில் இந்தியாவின் நோக்கம் செலுத்தப்படவில்லை.

### சூழ்நிலையில் மாறுதல்

உலக அரசியலில் தற்பொழுது நிலவும் பெறுத்தகட்சிகளின் பிரச்னைகள் இந்தியாவைபாதிக்கவில்லை என்றிருந்த போதிலும் இதுவரை இந்நாட்டுக்கு அனுகூலமாக இருந்த சில சூழ்நிலைகளில் மாறுதல்கள் தோன்றியிருக்கின்றன.

ரஷ்யா பெருத்த பலம்பெற்ற நாடாக இன்று காட்சியளிக்கின்றது. பிரிட்டிஷாரின் காலத்தில் பலமற்றிருந்த சீன இப்பொழுது முழுவலிமையுடன் உருவாகிவிட்டது. கேப்டவுனிலிருந்து சிங்கப்பூர்வரை பிரிட்டன் இயக்கிவைதத கடற்படை பலமும் இப்பொழுது குன்றிவிட்டது. இந்தியாவும் இரண்டாகப் பிளவுபட்டு விட்டது. எதிர்காலத்தில் பலத்த விரோதிகளின் கையில் சிக்காமல் இந்தியாவைப் பாதுகாக்க பல முனைகளில் அபிவிருத்திகள் செய்தாகவேண்டும். சீனவின் தெற்கு திக்கு விஸ்தரிப்பு மனப்பான்மைக்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். இத்துறையில் செயலாற்ற இந்தியா பாரசீகம், பாகிஸ்தான், நேபாளம், பர்மா, தாய்லாந்து மலாயா முதலிய நாடுகளுடன் உடன்பாடு செய்துகொண்டு கடல் மூலமாகவோ, தரை மூலமாகவோ தலை எடுக்கும் எதிர்ப்புகள் யாவற்றையும் முறியடிக்க பலம்பெறவேண்டும்.

கடல் வழி வரும் விரோதியின் எதிர்ப்புக்கு வேண்டிய தளவாடங்களை மேல் நாடுகளிலிருந்து பெற்று அத்துறையில் இந்தியா தன்னிறைவுபெறுவது நம்திட்டங்களில் முதலிடம் பெறவேண்டும். இக்குறிக்கோள்களை அடைவது எளிதல்ல; அடைவது சுலபம் என்றிருந்த போதிலும் குறுகிய கால அளவில் அவைகள் அடைய இயலாது. இன்னும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் சீன அணுசக்தியைப்பெற்றுவிட்டால் சூழ்நிலை முற்றிலும் மாறிவிடும். இத்துறையில் சீனவுடன் சமநிலை பெற இந்தியா அணுகுண்டுகளை உற்பத்திசெய்யவேண்டும். இக்குண்டுகளை உற்பத்திசெய்ய இந்தியாவில் விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களும், மற்றும் வேண்டிய வசதிகளும் இருக்கின்றன.

ஆனல் இக்குண்டுகள் தயாரிப்புக்கு ஏராளமாகப் பொருட்செலவு ஏற்படும்; ஆகையால் இந்தியா தனக்குவேண்டிய அணுகுண்டுகளை மேல் நாடுகளிலிருந்து பெறவசதி ஏற்பட்டால் பொருளாதாரம் நிலைகுன்ருது. இங்ஙனம் மேல்நாடுகளிலிருந்து இவ்வகைளைப் பெறுவதால் கூட்டு சேரா கொள்கைக்கு இடையூறு ஏற்படும் என்று இருந்தால் அதற்கு பங்கம் விளையாமல் இருப்பதற்கு இந்தியா இவைகளை உற்பத்தி செய்வதே தகுந்த முறையாகும்.

இந்தியாவின் இத்திட்டங்களுக்கு ரஷ்யாவின் நடுநிலைமை மனப்பான்மை பிற்காலத்தில் தளராமல் இருந்தால் அது இந்தியாவுக்குப் பெருத்த அளவு ஆதரவுகொடுக்கும். இத்துறையில் இந்தியப்பிரதமரின் கூட்டு சேரா கொள்கை எவ்வளவுக்கு உதவி புரியும் என்பது கூருமலே அறிந்து கொள்ளலாம்.

## எகிப்து தூதரக அதிகாரி கைது
### பாக்தாத்தில் சம்பவம்

பாக்தாத், ஜன. 28

ஈராக் அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக பாக்தாத்திலுள்ள ஐக்கிய அரபுக் குடியரசு தூதரகத்தைச் சேர்ந்த ஜனப் யூசுப் என்னும் அதிகாரியொருவர் ஈராக பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு கெய்ரோவுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். ஐக்கிய அரபுக் குடியரசு தூதரகத்தைச் சேர்ந்த மற்ருெரு அதிகாரியும் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## 'விசாரணை கமிஷன் நியமிக்கவும்'
### கிராம விதானைமார் சங்கம் கோரிக்கை

கொழும்பு, திங்கள்

சமீபத்தில் நடைபெற்ற கிராமசேவர்கள் பரீட்சையில் இடம்பெற்ற தலையீடுகள் குறித்து விசாரணைசெய்ய அரசியல் சார்பற்ற கமிஷன் ஒன்று நியமிக்கப்படவேண்டுமெனப் பிரதமரை கோரும் தீர்மானமொன்று அகில இலங்கை கிராமவிதானை மார் சங்கத்தின் ஊவா கிளை நடத்திய அவசர கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அகில இலங்கை கிராம விதானைமார் சங்கத் தலைவர் திரு. டி. பி. சந்திரசேகரா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அரசாங்கத்தின்மீது விசுவாசமுள்ள ஊழியரின் கோரிக்கையை அரசாங்கம் நிறைவேற்றத்தவறினல் சங்கம் நேரடி நடவடிக்கை எடுக்கும் எனத் தலைவர் தெரிவித்தார்.

இளைப்பாறிய அரசியல் சார்பற்ற சிவில்சேவை உத்தியோகஸ்தர்களை இக்கமிஷனில் அங்கத்தவர்களாக நியமிக்க வேண்டும் என்றும் தலைவர் எடுத்துக் கூறினர்.

## கண்டெடுக்கப்பட்ட பொருட்கள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கடந்த இரண்டு வருடத்திற்குள் கீரிமலைக் கேணியில் கண்டெடுக்கப்பட்ட நகைகள் வெண்கலச் சாமான்கள் மற்றும் துணிமணிகள் இன்று பிற்பகல் 5 மணிக்கு கீரிமலை கேணியின் காவலாளர் அறையில் தெல்லிப்பளைகிராமச் சபைத் தலைவர் திரு. கதிரையாண்டி தலைமையில் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### ஐயா[illegible]
எழுதுவது

இந்திய சுதந்திரக் குடியரசுத் தினத்தை முன்னிட்டு சீனப் பிரதமர் இந்தியப் பிரதமருக்கு வாழ்த்துச்செய்தி அனுப்பியுள்ளாராம். சீன அரசாங்கத் தலைவரும் இந்திய ஜனதிபதிக்கு இவ்விதமே வாழ்த்துக் கூறியுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. நம்ப முடிகிறதா?

இந்திய இராணுவத்தைச் சேர்ந்தவர்களில் பலர் இன்னும் சீனர்கள் வசம் கைதிகளாக இருக்கிருர்கள். அவர்களை இன்னும் விடுதலைசெய்யவில்லை. எல்லையிலே இருதரப்பு இராணுவமும் இன்னும் எதிர் எதிரே முஸ்தீபு செய்துகொண்டிருக்கின்றன. அப்படி வானெலியிலே இருதரப்பினரும் போட்டா போட்டி பிரசாரங்கள் நடத்துகிருர்கள். அப்படி ஒருபுறமிருந்தும், வாழ்த்துக்களை மற்ருெருபுறம் அனுப்புகின்றனர்.

இதைப் பார்த்துவிட்டு சிலர் இது சீனர்களின் சூழ்ச்சி என்றும்நரித் தந்திரமென்றும்அவர்களைநம்பக்கூடாதென்றும்குறை சொல்லலாம். அப்படி அவநம்பிக்கை கொள்ளக் காரணமுண்டுதான். ஆனல் வாழ்த்துகிறவர் யாராயினும் அதை வரவேற்கவேவேண்டும். இனி நடக்க இருக்கும் சமரசப் பேச்சுகளுக்கு, இவ்வித வாழ்த்துக்கள் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தலாம். சீனர்கள் தங்கள் தவறை உணர்ந்து எப்படியும் இந்தியாவுடன் மீண்டும் நட்புக்கொள்ள விரும்புவதற்கு இதெல்லாம் அடையாளமென்றே உணருகிறேன். இந்தியா வேறு, நேரு வேறு என்று முதலில் மித்ரபேத பிரசாரம் செய்யப்பார்த்தனர். தப்புக்கணக்குப் போட்டனர். தங்கள் தவறை உணர்ந்து, வாழ்த்துகிற பச்சை விரோதியிடமும் அன்பு காட்டத்தானே வேண்டும். 'பகைவனுக் கருள்வாய் நன்னெஞ்சே பகைவனுக் கருள்வாய்' என்று பாரதியார் அறிவுறுத்துகிருரல்லவா?

* * *

சேர். ஒலிவர் குணதிலகா இப்போது சென்னையிலிருந்து மைசூர் சென்று 5 நாள் தங்கி இருக்கிருராம். பின்னர் 31-ந் திகதி பம்பாய் புறப்படுவதாக பெங்களூர் செய்தியொன்று கூறுகிறது. பாவம்!

அவர் கவர்னர் ஜெனரலாக இருக்கையில் ஒரு முறையாவது இந்தியா சென்றதாகத் தெரியவில்லை. சென்றிருந்தால் எவ்வளவு உபசாரங்களெல்லாம் நடந்திருக்கும்! இப்போது சாதாரண மனிதராகவாவது, இந்தியா செல்ல முடிந்தது நல்லதே. அவரை இங்கே கைதுசெய்யவும் யோசனை இருந்ததல்லவா!

இவ்வளவு சமீபமாக வந்துள்ளவர், இலங்கைக்கு இப்போது வருவாரா? வர முடியுமா? எப்படியான அந்தஸ்திலிருந்தவர், நிலை எப்படி ஆகிவிட்டது! நாடகமே உலகம்!

* *

அல்ஹாஜ் டி. பி. ஜாயா அவர்களின் ஞாபகார்த்த கமிட்டியினர், இந்த நிதிக்கு அன்பர்கள் உதவவேண்டுமென்று உருக்கமான ஒரு வேண்டுகோளை வெளியிட்டுள்ளனர்.

பொதுமக்களுக்கு ஞாபகசக்தி மிகக் குறைவென்று கூறுவதுண்டு. இதற்குள் நம்மில் பலர் பெரியார் ஜாயாவை மறந்திருக்கவும்கூடும். அவர்கொழும்பிலே ஸாஹிராக் கல்லூரியின் அதிபராக இருந்து அதை வளர்த்தவர். இந்து மாணவர்களையும் ஆசிரியர்களையும், தமது கல்லூரியில், சமய பேதம் காட்டாமல் சேர்த்துக்கொண்ட பெரியவுள்ளம் படைத்தவர். மந்திரியாகவும், ஸ்தானிகராகவும் இலங்கைக்குத் தொண்டுசெய்த தேசாபிமானியவர். புதிய ஹஜ் யாத்திரை செல்கையில், மெக்கா

(8-ம் பக்கம் பார்க்க)

# தேசப் பிரச்னைகளுக்கு கொள்கைநிர்ணயக் குழு

## எல்லா கட்சிகளுக்கும் அதில் இடமளிக்கப்படும்

பொலநறுவை, திங்கள்

முக்கியமான தேசப்பிரச்னைகளில் அரசாங்கத்தின் கொள்கையை நிர்ணயிப்பதற்காக பிரதிநிதிகள் சபையிலுள்ள எல்லாக் கட்சி மெம்பர்களையும் சேர்த்துக்கொண்டு விசேஷ குழுக்களை அரசாங்கம் நியமிக்கவிருப்பதாக காணி,விவசாய அமைச்சர் திரு. ஸி. பி. டி' சில்வா தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நடைபெற்ற அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் 44-வது மகாநாட்டில் பேசியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் இதுபற்றிப் பேசுகையில் ஏற்கனவே நியமிக்கப்பட்ட இதுமாதிரி ஒரு குழு தேர்தல் சட்ட திருத்த வேலைகளைப் பூர்த்திசெய்திருப்பதாயும், மற்றொன்று அரசாங்கத்தின் கலால் கொள்கையை நிர்ணயிக்க அமைக்கப்பட்டிருப்பதாயும் கூறினர். அவ்வப்போது இதுமாதிரிப் பல குழுக்களை அரசாங்கம் நியமிக்கும் என்றும் தெரிவித்தார்.

புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதியின் கொள்கையில் ஒரு சிறுமாறுதல் கொண்டுவரப்படவிருப்பதுபற்றி அமைச்சர் பேசியபோது "இதுவரை காலமும் இப்பகுதியின் புராதன சின்னங்களைப் பார்வையிட்டு வந்தார்கள். இனிமேல் அவைகளைப் பாதுகாக்கும் பொறுப்பும் இவர்களைச்சாரும். அவசியமானபோது அவற்றுக்குப் பழுதுபார்த்து பாதுகாக்க வேண்டிய வேலைகளும் இவர்களிடம் விடப்படும்" என்ருர்

அரசாங்கத்தின் கலால் கொள்கைமீது பேசியபோது அமைச்சர் கூறியதாவது:-

கலால் கொள்கையை நிர்ணயிக்க பிரதிநிதிகள்சபை மெம்பர்களைக்கொண்டதொரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. சாராயம், கசிப்பு போன்ற குடிவகை சட்டவிரோதமாகக் காய்ச்சப்பட்டு வருவது நமக்கெல்லாம் தெரிந்துதானிருக்கிறது. தென்னையும், கித்துலும், பனையும் உள்ளவரை இதை முற்ருகத்தடைசெய்துவிடுவதென்பது இலகுவான காரியமல்ல. இனிப்பான சீனியும் புளிப்பான காடியும் கசிப்பு வடிக்க உதவுகின்றன. இனிப்பும் புளிப்பும் இப்படித் விரயமாகிற தென்பதற்காக இரண்டையும் கைவிட்டுவிட யார் சம்மதிப்பார்கள்? மதுஅருந்தும் வழக்கம் எனக்குக் கிடையாது. மதுஅருந்தும் பழக்கமுடையவனுக்குக் குறுக்கே செல்லவும் நான் விரும்புவதில்லை.

மதுவிலக்கு அமெரிக்காவில் ஒருகாலத்தில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அப்பொழுது அதுவேறு பல மோசமான பிரச்னைகளை அங்கு தோற்றுவித்துவிட்டது. அதனால் மதுவிலக்கு அங்கு தோல்வியே அடைந்தது. இந்தியாவில் சென்னை, பம்பாய் இராச்சியங்களில் மதுவிலக்கு சட்டபூர்வமாக நடைமுறையிலிருந்துவருகிறது. ஆனால் நான் அறிந்தமட்டில் இங்கெல்லாம்கூட மதுவிலக்கு நூற்றுக்கு நூறு வெற்றியளித்திருப்பதாகச் சொல்வதற்கில்லை.

பொலநறுவை ஒரு வரண்ட பிரதேசம். இங்குள்ள மாகாண கச்சேரியிலிருக்கும் சிற்றுண்டிச் சாலையில் 300 வெற்று சாராயப்புட்டிகள் இருந்ததைகக்ண்டதாக அரசாங்க அதிபர் புகார் செய்திருக்கிருர். இம்மாதிரியான ஒழுங்கீனங்கள் சம்பவிக்காத வகையில் அநுபவசாத்தியமான நோக்குடன் செயலாற்ற வேண்டும். அதற்காகத்தான் கலால் கொள்கையை நிர்ணயிக்க பார்லிமெண்ட் மெம்பர்களைக் கொண்டதொரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

---

## பருக உதவாத தண்ணீர்

கொழும்பு, திங்கள்

கடந்த வருடம் வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனத்தாரால் பரிசோதனை செய்யப்பட்ட குடிதண்ணீரில் நூற்றுக்கு நாற்பது விகிதமே பருகுவதற்கு உகந்ததாகக்காணப்பட்டது. மிகுதி பாவனைக்கு உதவாததாயிருந்து.

மாகணங்களில் உள்ள பாண் போறணைகள் உணவுச்சாலைகளிலிருந்து தண்ணீர் மாதிரிக்காக எடுத்து பரிசோதித்து பார்க்கப்பட்டது. சோடாத் தயாரிக்கும் ஸ்தாபனங்கள், நீராடும் குளங்கள் முதலியவற்றிலிருந்தும் தண்ணீர் பரிசோதனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்விதத்தில் மொத்தமாக 864 வகை தண்ணீரை சுகாதார ஆராய்ச்சி நிலையம் பரிசோதனை செய்தது.

பரிசோதனை செய்யப்பட்ட பெரும் பகுதி தண்ணீரில் அழுக்குப் பொருள்கள் மிகுதியாக இருக்க கண்டுபிடிக்கப்பட்டது.

---

## பரிசு பெற்றவர் தற்கொலை

ஹபரடுவ, திங்கள்

சில மாதங்களுக்கு முன்னர் காலி ஜிம்கான கிளப் குதிரைப்பந்தயத்தில் ரூ. 62,825 பரிசைப் பெற்ற 55 வயதான டார்லிஸ சில்வா என்பவர் றப்பர் மரத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

காலி ஜிம்கானப் பரிசைப் பெறுவதற்கு முன்னர், இ. போ. ச. பஸ சாரதியாக இவர் கடமையாற்றினர். பரிசு பெற்றதும் தனது தொழிலிருந்து ராஜினமாச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## மோசடிசெய்த குற்றம்

### ரூ. 1000 அபராதம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

1960-ம் ஆண்டு நீர்வேலி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மனேஜராக விருந்து இரு செக்குகள் மூலம் ரூ. 427.06 சதத்தை மோசடி செய்த குற்றத்திற்காக நீர்வேலியைச் சேர்ந்த கந்தையா விவாயகசுந்தரம் என்பவருக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் திரு. அரசு வால்டன் ரூ. 1000 அபராதம் விதித்தார்.

பொய்க் கணக்குகள் செக்குகள் மோசடி மூலம் சுமார் 16000 ரூபா வரையில் மோசடி செய்ததாக நீர்வேலி தெற்கு பலநோச்குக் கூட்டுறவு மனேஜராக 1960-ம் ஆண்டிலிருந்த கந்தையா விநாயகசுந்தரம் என்பவர் மீது புகார்செய்யப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் விசேஷ பொலிசைச் சேர்ந்த சார்ஜண்ட் திரு. ஈ. ஈஸவரபாதம் விசாரணை நடத்தி வந்தார்.

நீர்வேலியைச் சேர்ந்த டி. கிருஷ்ணபிள்ளை என்பவரின் பெயரில் ரூ. 275.37 சதத்திற்கும், வல்லி நாகநாதன் என்ற பெயரில் ரூ. 151.69 சதத்திற்கும் இரு செக்குகள் எழுதி மோசடி செய்த குற்றத்தை எதிரி ஒப்புக் கொண்டார் எதிரிக்கு ரூ. 1000 அபராதம் விதிக்கப்பட்டது.

---

# 'வீடில்லாதவர்களுக்கு வீடமைப்புத் திட்டம் அமுலாக்கவேண்டும்'

## ஸ்தலஸ்தாபன தொழிலாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

"கிராம, பட்டின நகரசபைத் தொழிலாழர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணவேண்டுமானல் ஐக்கியப்பட்ட போராட்டமே உகந்த வழி என்று வடபகுதி ஸ்தலஸ்தாபனத் தொழிலாளர் ஆலோசனைக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் திரு. அ. சூசை கூறினர். யாழ்ப்பாணம் சேனியதெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற தொழிலாளர் மகாநாடு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபனத் தொழிலாளர் சங்கக் காரியதரிசி தி. ஏ. செல்லையா பேசுகையில், தொழிலாளர் ஒன்றுபட்டால் எந்தச் சக்தியையும் முறிக்க முடியும். என்று குறிப்பிட்டார்.

திருநெல்வேலி கிளைத்தலைவர் திரு. சின்னத்தம்பி, ஊர்காவற்றுறை சங்கக் காரியதரிசி திரு. எஸ். பரஞந்து, காங்கேசன்துறைப் பகுதிக் காரியதரிசி திரு. பத்திராசா, காஙகேசன்துறைப் பட்டின சங்கத்தவர் டாக்டா சு. வே. சீனிவாசகம், இலங்கைத் தொழிற்சங்கப்பிரதிநிதி திரு. எஸ். இராசையா ஆகியோர் பேசினர்.

பின் வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

வேலை நிறுத்தம் செய்த மாநகரசபைத் தொழிலாளர்களுக்கு முழுச் சம்பளமும் வழங்க வேண்டும்

எல்லாப் பாகங்களிலும் தற்காலிக தொழிலாளர்களின் சம்பளக்குறைப்பை கமிஷன் நிறுத்த வேண்டும்.

வீடில்லாதவர்களுக்கு வீட்டுத் திட்டம் எல்லா இடங்களிலும் அமுலாக்க வேண்டும். மாநகரசபையில் வீடிழந்தவர்களுக்கு வீடு தற்காலிகமாக வேனும் கொடுக்க வேண்டும்.

கிராம, பட்டின, நகரசபைத் தொழிலாளர்களுக்கு வேலை செய்யும் நேர உடைகள் வழங்கவேண்டும்.

ஊர்காவற்றுறை தொழிலாளர் கோரிக்கையை பட்டின சபை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

வடபகுதியில் உள்ள சகல சபைகளின் தொழிலாளர்களது மகாநாட்டினை மிக விரைவில் கூட்டுவதற்கு உபசபையொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கத்தூதுக்குழு புதன்கிழமை வடமாகாண அரசாங்க அதிபரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்த விருப்பதாகவும் அறியப்படுகிறது.

---

# மகனின் மரணம்பற்றி தாயார் பொலிசில் புகார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

அச்செழுவில் ஒருவர் மரணமானது சம்பந்தமாகப் பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர். உலோகஸ அருளப்பு என்பவரின் மரணம் சம்பந்தமாகக் காலஞ் சென்றவரின் தாயார் பொலிசில் புகார் செய்ததனைத் தொடர்ந்தே இந்த மரணம் சம்பந்தமாகப் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

உலோகஸ அருளப்புவின் மரணம் சம்பந்தமாக யாழ்ப்பாணம் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ. கனகர்த்தினம் விசாரணை நடத்தினர். காலஞ்சென்றவரின் மனைவி அன்னம்மா சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது:-

1954-ம் ஆண்டு எங்கள் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. 4 குழந்தைகள் உண்டு. முதலாவது குழந்தைக்கு 7 வயது. கடைசிக் குழந்தைக்கு ஒரு வயது.

இம்மாதம் 22ம் திகதி இரவு பத்து மணியளவில் எனது கணவர் நல்ல குடிவெறியில் வீட்டுக்கு வந்தார். வீட்டு முற்றத்தில் இருந்த கல்லில் மோதி கீழே விழுந்தார். நாடியில் காயம் ஏற்பட்டது. அவரை வீட்டுக்குள் கொண்டு சென்றேன். அன்றிரவு அவர் சாப்பிடவில்லை. மறுநாட் காலையில் அவர் கண் கறுத்துப்போயிருந்தது. கைமருந்து ஒன்றினைப் பூசினேன். அவர் ஒருவருடனும் பேசவில்லை. மறுநாள் நீண்ட நேரமாக தலையில் கை வைத்துக்கொண்டு யோசனையில் இருந்தார். அன்றிரவு அவருக்கு வலிக்குணம் ஏற்பட்டது. வாயினுலும் மூக்கினுலும் நுரை வந்தது. அடுத்த நாட் காலை 10 மணிக்கு அவர் இறந்துவிட்டார். பெரியவிளானில் உள்ள அவரின் பெற்ருேர்கள் வந்தனர். அவரின் தாயார் மகனி உடலில் காயம் இருக்கக் கண்டு பொலிசாரிடம் முறைப்பாடு செய்தார்.

பிரேத பரிசோசதனைசெய்த யாழ்ப்பாணம் சட்டவைத்திய அதிகாரி சாட்சியமளிக்கையில், காலஞ்சென்றவரின மண்டைக்குள் காயம் இந்தது. அக்காயம் விழுந்ததாலும் உண்டாகும், அடிபட்டாலும் உண்டாகும் என்று குறிப்பிட்டார். மரண விசாரணை அதிகாரி பொலிசாரிடம் விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டார்.

---

## வட்டாரங்கள் அதிகரிப்பு

மட்டக்களப்பு, திங்கள்

மட்டக்களப்பு நகரசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட வட்டாரங்களின் தொகை தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள சகல வட்டாரங்களிலும் சமதொகையான வாக்காளர்கள் இருக்கக் கூடியதாக பத்து வட்டாரங்களையும் பன்னிரண்டு வட்டாரங்களாகப் பிரித்துள்ளனர்.

இப்புதிய வட்டார அடிப்படையில் மட்டக்களப்பு புளியந்தீவு பகுதியில் ஐந்து வட்டாரங்களும், கோட்டைமுனை பகுதியில் ஏழு வட்டாரங்களும் தற்போது உருவாக்கப்பட்டுள்ளன. நகரசபைத் தேர்தல் இவ்வருடம் ஜூலை மாதம் நடைபெறவிருக்கிறது.

---

## உதவி மேற்றிராணியாராக நியமனம்

கொழும்பு, திங்கள்

கொழும்பு அதிமேற்றிராசன உதவி மேற்றிராணியாராக மொன்சிஞ்ஞோர் சேரம் அடிகள் பரிசுத்த பாப்பரசரால் நியமனம் பெற்றுள்ளார். என உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேரம் அடிகள் தற்போது கொழும்பு மேற்றிராசன விக்கார் ஜெனரலாகப் பதவி வகித்து வருகிருர்.

---

## ரூ. 500 அபராதம்

### காயப்படுத்தியதாக தொடரப்பட்ட வழக்கில்

யாழ்ப்பாணம், செவ்வாய்

பூநகரி பன்னவலையைச் சேர்ந்த ஆறுமுகம் சதாசிவம், சதாசிவம் பாறுபதிப்பிள்ளை ஆகிய இருவருக்கும் கத்தியால் வெட்டி, பலத்த காயமேற்படுத்தியதாக மகாலிங்கம் கணேஷ் என்பவர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மேலதிக மாஜிஸ்டிரேட் திரு. வி. எம். குமாரசாமி முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணை முடிவில் எதிரிக்கு ரூ. 500 அபராதமும், நீதிமன்றம் கலையும்வரை சிறைவாசமும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. அபராதத் தொகையில் ரூ. 250 காயப்பட்ட இருவருக்கும் நஷ்ட ஈடாகக் கொடுக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

எதிரிசார்பில் திரு. ஏ. அமிர்தலிங்கம் திரு. எஸ். நடராசாவின் அனுசரணையுடன் ஆஜரானர், முடிக்குரிய தரப்பில் திரு. எஸ. சி. கதிரவேலு, திரு. வி. நடராசாவின் உதவியுடன் ஆஜரானர்.

---

## மக்கள் வங்கி அடுத்தமாதம் திறக்கப்படும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

காங்கேசன்துறையில் மக்கள் வங்கிக்கிளை நேற்று ஆரம்பிக்கப்படவிருப்பதனை எதிர்பார்த்த மக்கள் அனைவரும் பெரும் ஏமாற்றத்திற்குள்ளானர்கள் மக்கள் வங்கிக் கிளையைத் திறந்துவைக்க அமைச்சர் யாராவது வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. நேற்று மக்கள் வங்கி திறந்துவைக்கப்படவில்லை.

காங்கேசன்துறை பட்டின சபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் மக்கள் வங்கிக்கிளை திறந்து வைப்பதற்கு ஏன் காலதாமதம் செய்யப்படுகின்றது என்றுகேட்டு மேலதிகாரிகளுக்குக் கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

மக்கள் வங்கிக்கிளையின் தற்போதைய முகாமையாளருக்கும் வங்கிக்கிளை திறந்து வைப்பது சம்பந்தமாக எதுவிதமான அறிவித்தலும் இன்றும் கிடைக்கவில்லை என்று தெரிகிறது.

பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் மக்கள் வங்கிக்கிளை திறந்துவைக்கப்படுமெனஎதிர்பார்க்கப்படுகிறது.

---

## இறக்குமதி லைசென்ஸ் பற்றி அறிவிப்பு

கொழும்பு, திங்கள்

இறக்குமதிக் கட்டுப்பாட்டு இலாகாவில் பெயர் பதிவானோர் மட்டுமே அரசாங்கத்துக்காகவோ அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்காகவோ பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அல்லாத மற்றவர்கள் அதற்கு தனிப்பட்டோர் இறக்குமதி லைசென்சுகள் வாங்கியாகவேண்டுமென்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. மயில்வாகனம் இறக்குமதியாளர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.



# மாணவர் மலர்



துப்பறியும் கதை

## பறக்கும் பாம்பு

— மகான் —

மட்டக்களப்பு எங்கும் ஒரே பரபரப்பு! மூன்று நாட்களில் மூன்று மரணங்கள்! அதுவும் கொடிய விஷப்பாம்புக்கு பலியாகியிருக்கிறார்கள். வீடுகளிலும் வீதியோரங்களிலும் மூலை முடுக்குகளிலெல்லாம் இதைப பற்றித்தான் பேச்சு! திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாட்களிலும், மூம் மரணங்கள். மூவரும் விஷப்பாம்புக்குப் பலியானவர்கள்.

லேடிமனிங்ஸ் டிரைவ்வும், புகையிரத ஸ்ரேஷன் வீதியும் சந்திக்குமிடத்தில் ஒருவர் மரணமாகியிருக்கிறார். மட்டக்களப்பு கச்சேரியில் குமாஸ்தாவாக வேலைபார்க்கும் இவர்தான் நச்சுப்பாம்புக்கு முதற் பலியானவர். இவர் பற்றி விசாரித்துப் பார்த்ததில்; தியேட்டரொன்றில் இரண்டாம் காட்சி படம்பார்க்கச் சென்றவரென்றும், படத்துக்குப் போவதாக, தனது பெற்றோரிடம் சொல்லிவிட்டுச் சென்றவர் அடுத்தநாட்காலை வரை வீடுதிரும்பவில்லையென்றும், பின்னர் விபரம் தெரிய வந்ததென்றும் கூறப்பட்டது. இறந்தவரான நாகராஜாவின் 'ஷேட்'பாக்கெட்டுக்குள், படம் பார்த்ததற்கு அறிகுறியாக "டிக்கட்' அடிக்கட்டை இருந்தது. நாகராஜாவின் வலது காலில், முழந்தாளுக்கு சிறிது கீழாக விஷப்பாம்பின் இரு பற்கள் பதிந்த அடையாளம் காணப்பட்டன! மரணவிசாரணையில்; விஷப்பாம்பின் கொடிய விஷத்தினால் நாகராஜா மரணமானாரெனத் தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவம் திங்கட்கிழமை இரவு சுமார் 12-30-க்கு நடைபெற்றது!

செவவாய்க் கிழமை இரவும் இதேபோன்று கொடிய விஷப்பாம்பு ஒன்றுக்கு ஒருவர் பலியாகியிருக்கிறார். மட்டக்களப்பு தபாலாபீஸில் வேலை பார்க்கும் பிரேமநாதன் இரவு வேலை முடித்துவிட்டு வீடு திரும்பும் வழியில், இரவு சுமார் ஒருமணியளவில், பயணியர்வீதி ஆரம்பமாகும் இடத்தில் கொடிய விஷப்பாம்புக்கு பலியாகியிருக்கிறார். இவரின் மரணத்தில் என்ன விசேஷம் என்றால், நச்சுப்பாம்பின் இரண்டு பற்கள் பிரேமநாதனின் பிடரியில் பதிந்திருந்தன! இந்த விபரம் தான் மக்களை மேலும் பீதிக்குள்ளாக்கியது.

அந்தக் காலத்தில் மனிதர்களின் தெய்வபக்தியின் திறமையினால், மனிதரின் கண்களுக்கு தேவர்களும் கடவுளும் காட்சியளித்தார்கள் என்றும் வானவீதியில், தேவர்கள் அந்தரத்தில் நின்றார்களென்றும் பல கதைகளுண்டு. ஆனல் இந்தக்காலத்தில் பூமியிலிருந்து பலமைலுக்கப்பால், காற்றோட்டமில்லாத இடமிருக்கிறதென்றும், அங்கு மனிதரும், பொருட்களும் அந்தரத்திலிருக்க முடியுமென்றும் விஞ்ஞானம் கண்டுபிடித்திருக்கிறது. எது எப்படியிருந்தாலும், பிரேமநாதனின் பிடரியல் விஷப்பாம்பு கடிப்பதென்றால் — அது நிச்சயமாக அந்தக்காலத்திலிருந்த பறக்கும் பாம்பின் வம்சாவழியாகத்தானிருக்க வேண்டுமென்பது மக்களின் மனதில் நன்ருகப் பதிந்திருந்தது.

மட்டக்களப்பில் பிரபல்யம் வாய்ந்தவரும் இலங்கையிலுள்ள பிரபல சோதிடர்களில் ஒருவருமான ஜெயராஷ்மா அண்மையில் தினசரிப் பத்திரிகையொன்றில் எழுதியிருந்த கட்டுரைதான் மக்களின் மனதில் பதிந்திருந்தது! மட்டக்களப்புக்கு அண்மையிலுள்ள காட்டுக்குள் பல வருடங்களாக வசித்துவந்த பறநாகக் குடும்பங்களின் கடைசி வம்சம், விரைவில் மட்டக்களப்பு நகருக்குள் பிரவேசிக்கலாமென்றும் பயங்கரமான இப்பாம்புகளினால் பல உயிர்கள் மடியலாம் என்றும் இப்பாம்புகள் பறக்கும்சக்தி உடையவை என்பதினால் இலேசில் அவைகளை நாம் காணமுடியாதென்றும் பறக்கும் நாகப் பரம்பரையின் கடைசிக் குடும்பமாகவிருக்கும் இவ் விஷப்பாம்புகள், சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த ஒரு முனிவரின் சாபக் கேட்டினால், மனிதர்களை அல்லது வேறு உயிரினங்களைப் பழிவாங்கலாமென்றும் இதன் மூலம் அப்பாம்புகளின் சாபம் நீங்கிவிடுவதுடன் பரம்பரையும் அழிந்துவிடுமென்றும் மக்களுக்கு இதுவரை காலமுமிருந்த துன்பங்கள் நீங்கி இன்பமாக—மகிழ்ச்சியாக வாழ்வார்கள் என்றும் ஜெயர்ாஷமா தமது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். இந்தக் கட்டுரை, மட்டக்களப்பு மக்களை மட்டுமின்றி இலங்கை மக்களையே பெரும் பீதிக்குள்ளாக்கியிருந்தது!

புதன்கிழமை! மட்டக்களப்பு தியேட்டர் ஒன்றில் 'ஆபரேட்டராக' கடமையாற்றும் முத்துலிங்கம், ஆஸ்பத்ரிவீதி—சப்பல் வீதி சந்திக்குமிடத்திலுள்ள பயங்கரத் தோற்றமுடைய ஆலமரத்தின் அருகில் மாண்டுகிடந்தார்! அவருடைய கழுத்துக்கு சமீபத்தில்-தோள் பட்டையில், சொடிய விஷப்பாம்பின் இரு பற்கள் பதிந்திருந்தன! அடுத்த நாட்கள் நடைபெற்ற இம்மூன்று மரணங்களினால், பொலிஸாருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. திருடன், கொலைகாரன் என்றால் வலைபோட்டு தேடிக் கண்டுபிடித்துவிடலாம். ஆனல், பாம்பென்றால்......? மக்களின் பீதியை எப்படிப் போக்குவதென்றே பொலிஸாருக்குத் தெரியவில்லை. தலைமைக்காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் சில்வாவுக்கு, சங்கடமான இந்த நிலைமையை எப்படிச் சமாளிப்பதென்றே தெரியவில்லை. மக்களின் நடமாட்டமும் நகரில் குறையத் தொடங்கியது. ஆனல், எச்சமயம், யாரை, எங்கு பாம்பு பழிவாங்குகிறது என்ற பயங்கர விஷயம்தான் மக்களின் மனதில் ஒவ்வொரு நிமிடமும் ஒலித்துக்கொண்டிருந்தது.

பொழுது விடிந்தது. ஆதவன் தனது செங்கதிர்களை பூமியில் பரப்பத்தொடங்கினன். ஆம் அன்று வியாழக்கிழமை! கடந்த மூன்று நாட்களிலும் நிகழ்ந்த மூன்று மரணங்களினால் பீதியுற்றிருந்த மக்கள் பாம்புச் செய்திகளை அறிய ஆவல் கொண்டனர். இருந்தபோதிலும், "மாலை வந்தால்...?" மனதிற்கினிய தென்றல் வீசும் மாலைநேரம் மக்களைக் கொல்லாமல் கொன்றது.

∴ ∴ ∴

கோப்பியைப் பருகிக் கொண்டே, தினசரிப் பத்திரிகையொன்றை சி. ஐ. டி. ஷகான் படித்துக்கொண்டிருந்தார். "டிரிங்...டிரிங்...டிரிங்..."- அங்கிருந்த டெலிபோன் அலறியது!

[தொடரும்]

## துப்பறிய முடியுமா?

ஜமீந்தார் ஜகன் வீட்டுக் கூரையைப் பிரித்து, யாரோ பல ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள தங்க நகைகளைக் களவாடிச் சென்ற விஷயம் சி. ஐ. டி. ஷகானுக்குத் தெரிவிக்கப்பட்டது,

"ஹலோ...சி. ஐ. டி. ஷகான் பேசுகின்றேன்...ஓ... ஜமீந்தார் ஜகன் பேசுகிறீர்களா...என்ன நகைகளா......கூரையைப் பிரித்தா...பதட்டமடையாதீர்கள். இதோ புறப்பட்டு வந்துவிடுகிறேன்." 'கிளிக்'- டெலிபோன் றிசீவர் வைக்கப்படும் சத்தம் கேட்கிறது.

ஜகன் வீடு. ஜமீந்தார் ஜகனுடன் சி. ஐ. டி. ஷகான் கதைத்துக் கொண்டிருக்கிறார். (வீட்டு அறைகளை நோட்டமிட்டுக்கொண்டே)

'சம்பவம் நடைபெற்றபொழுது மணி என்ன இருக்கும்?'

'சுமார் ஒரு மணி இருக்கும் ஸார்.'

'உங்களுக்குச் சத்தம் ஒன்றும் கேடகவில்லையா...?'

"நான் இங்கு இருந்தால் தானே ஸார் சத்தம் கேட்பதற்கு. நான் ஒரு அவசர காரணமாக வெளியூர் சென்று விட்டு வீட்டுக்குக் காலை இரண்டு மணிக்குத்தான் வந்தேன். வீட்டில் எனது வேலைக்காரன் வேணுதானிருந்தான். நமது கஷ்டகாலத்துக்கு அவனும் இரண்டாம் காட்சி படம் பார்க்கப் போய்விட்டான்."

"ஓ...அப்படியா...? அது சரி, சுமார் ஒரு மணியளவில் திருட்டு நடைபெற்றது என்று கூறினீர்களே. நீங்கள் இரண்டு மணிக்குத்தானே இங்கு வந்தீர்கள்?"

"ஆமா ஸார். எனது வேலைக்காரன் இரண்டாம் காட்சி படம் முடிந்து வீட்டுக்கு வந்த சமயம், (சுமார் ஒரு மணியளவில்) யாரோ ஒரு உருவம் பதுங்கிச் செல்வதைக் கண்டானம். யார் என்று அறிவதற்கு அவன் முயற்சிக்க முன்னர் அந்த உருவம் ஓடிவிட்டதாம் என்று வேணு சொன்னன் ஸார்."

வேலைக்காரன் வேணுவை சி. ஐ. டி. ஷகான் விசாரித்தார். ஜமீந்தாரின் மனைவி, மக்கள் விடுமுறைக்கு வெளியூர் சென்றிருந்தார்களென்றும் வீட்டில் ஜமீந்தாரும் தானும் தான் இருந்ததாகவும் வேணு சொன்னன்.

"வேணு; நீ படத்துக்குச் சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பும்பொழுது ஒரு மணியிருக்கும். பின்னர் அந்த உருவத்தைக் கண்டாய்; ஏன் அவனை நீ துரத்தவில்லை?"

"ஸார், நான் படம் பார்த்து விட்டு வீட்டுக்குத் திரும்புகையில் ஒரு மணிதான் ஸார். பதுங்கிச் சென்றவன்மீது நான் சந்தேகங் கொள்ளாததினாலும், ஐயா வீட்டில் துணிந்து எவனும் களவாடமாட்டான் என்ற துணிவினலும்தான் ஸார் நான் அவனைத் துரத்தவில்லை."

சி. ஐ. டி. ஷகான் ஒரு இடத்துக்குப் போன் செய்து எதையோ 'நோட்' புத்தகத்தில் குறித்துக்கொண்டார்.

சி. ஐ. டி. ஷகான்; ஜமீந்தார் வீட்டின் அறைகளையெல்லாம் மீண்டும் நோட்டம் விட்டார். ஜமீந்தார் அறை, மற்றுமிரு அறைகள், ஹோல், ஸ்டோர் றூம் எல்லாவற்றையும் பார்வையிட்டுக்கொண்டு, வேணுவின் அறைக்குள் நுழைந்தார். சுவரில் அடிக்கப்பட்ட ஆணியில் வேணுவின் ஒரு 'ஷேட்'டும், சாரமுமிருந்தன. 'ஷேட்' பாக்கட்டுக்குள் கையைச் செலுத்தினர். ஒரு காகிதத் துண்டை எடுத்துக்கொண்டார்.

ஐந்து நிமிடங்கள் சென்றன. சி. ஐ. டி. ஷகான் ஜமீந்தார் ஜகனைப் பார்த்து, "மிஸ்டர் ஜகன், உங்கள் வேலைக்காரன் தான் நகைகளைத் திருடியிருக்கின்றான். இவனைக் கைது செய்ய வேண்டும்" என்றார். ஜமீந்தாரின் கண்கள் ஆச்சரியத்தால் சிவந்தன. வேணு பயத்தினால் விழித்தான்!

அது சரி; ஜமீந்தார் வீட்டு வேலைக்காரன் வேணுவை சி. ஐ. டி. ஷகான் ஏன் கைது செய்யச் சொன்னார்? வேணு உண்மையிலேயே குற்றவாளி தானு? துப்பறியுங்கள்; துப்பறிந்து விடையைத் தபாலட்டையில் எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னதாக "துப்பறிந்தேன்" மாணவர் மலர், ஈழநாடு, த. பெ: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள்.

—"சி. ஐ. டி."

## மூளைக்கு வேலை

மூளைக்கு வேலைப் பகுதியில் சென்ற வாரம் கேட்கப்பட்ட கேள்விக்கு நாம் எதிர்பார்த்ததை விடக் குறைவானவர்களே பதிலளித்தார்கள். இதில் என்ன விசேஷம் என்றால், குறைவாக விடையளித்தவர்களிலும் ஐந்து பேர் தான் சரியாக விடையெழுதியிருக்கின்றனர். சென்ற வாரம் வெளியான கேள்விகளைப் போன்ற கேள்விகளை உங்களிற் பலர் விரும்புகிறீர்கள் இல்லை என்பதை எமக்கு நீங்கள் எழுதும் கடிதங்களிலிருந்து தெரியவருகிறது. உங்களுக்குப் பிடித்தமான, நீங்கள் வரவேற்கும் கேள்விகளையே கேட்போமன்றி உங்களின் ஆசைக்கு எதிராகப்போக மாட்டோம்.

சரி கடந்தவாரம் நாம் கேட்ட கேள்வியைக் கவனிப்போம். எனது சின்ன மாமா கேட்ட கேள்வியின் சரியான விடை சுமார் 100 (நூறு) வருடங்களாகும். சரியான விடையனுப்பியுள்ள பின்வருபவர்களுக்கு எமது பாராட்டுதல்கள்.

எஸ். வி. சிங்கம், மாவையூர்; இந்திராணி சொர்ணகாந்தி ஆறுமுகம், பிரதான வீதி, பருத்தித்துறை; க. சீனியர், கோவிலாக்கண்டி; வ. வரலெட்சுமி, ஓமந்தை; எஸ். சரவணபவன், அனுராதபுரம்.

### இவ்வாரக்கேள்வி

அ, ஆ, இ, ஈ, உ... எல்லாம் தமிழ் எழுத்துக்களாகும். அது போல் ஜி. எச். ஐ. ஜே. கே.... எல்லாம் ஆங்கில எழுத்துக்களாகும். எழுத்துக்களெல்லாம்உங்களுக்குச் சர்வசாதாரணம். அநேகமாக ஆங்கில எழுத்துக்கள் இந்தஎல்லாவற்றையும் சுமாரான அல்லது அநேகமாகச் சரியான உச்சரிபபுடன் தமிழில் எழுதமுடியும். உதாரணமாக, S என்ற ஆங்கில எழுத்தை 'எஸ்' என்றும், J என்ற ஆங்கில எழுத்தை 'ஜே' என்றும் தமிழில் சரியான உச்சரிப்புடன் எழுத முடியும். ஆனல், ஒரு ஆங்கில எழுத்தை சரியான உச்சரிப்புடனே அல்லது சுமாரான உச்சரிப்புடனே தமிழில் எழுத முடியாது! அந்த ஆங்கில எழுத்து என்னவென்று உங்களாற் கூற முடியுமா? சிந்தியுங்கள். விடை தெரிந்தால் அதை, எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னதாக மாணவர் மலர், 'ஈழநாடு' த. பெ: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள். மீண்டும் அடுத்த வாரம் சந்திப்போம்.

—சாந்தா

## மகாத்மா காந்தி

—க. நீலகண்டன்—

அஹிம்சைமன்னன் மகாத்மா காந்திஜீ யை அறியாதவர்கள் இல்லை எனத்துணிந்து கூறிவிடலாம். பாரதம் ஓர் சுதந்திர நாடாகக் காரணமாக இருந்தவர் காந்திஜீ அவர்களே. லண்டன் சென்று நீதியுரைக்கும் வழக்கறிஞராகப் பயின்று தாயகம் திரும்பினர். தாயாருக்கு அளித்த வாக்குறுதிக்கிணங்க மாமிசம் புசிக்காது, மதுவருந்தாது தாயகம் திரும்பிய பாரதச் செல்வன் காந்திஜீயை பாரத மாதா தன் சுதந்திரப் போராட்டத்துக்குள்ளிழுத்து விட்டார். காந்திஜீ இந்தியாவின் சுதந்திரத்திற்காகவே தன் வாழ்நாட்களில் பெரும் பகுதியைச் செலவிட்டார். "முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்" என்பது ஆன்றோரின் அருள் வாக்கு. அதே அருள் வாக்குப்படி மகாத்மா தன் முயற்சியால் பாரத தேவியை சுதந்திர தேவியாக்கித்தந்தார்.

காந்திஜீயின் ஒவ்வொரு சொல்லிலும் சுதந்திர தியாகம் பிரகாசிக்கும். 1947-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் டில்லியில்நடந்தஓர் ஆசிய மகாநாட்டில் சொற்பொழிவாற்றிய காந்திஜீ உண்மையைக் கடவுளாக மதிக்க வேண்டுமென்று கூறினர். காந்திஜீ அவர்களின் ஆயுதம் அஹிம்சை. அஹிம்சைக்கு நிராயுதம் இவ்வுலகில் வேறு ஒன்றுமேயில்லை. உருவமில்லாத ஆயுதமான அஹிம்சை மூலம் இரத்தம் சிந்தாது அந்நியனை எதிர்த்தார் காந்திஜீ. இந்தியத் தொண்டர்களுக்கு தலைமை தாங்கி வெற்றி கரமான சுதந்திரம் பெற்ற சீலர் மகாத்மா டாம்பீகமாக வாழ விரும்பவில்லை. ஆங்கிலேய சூட்ஸ், பூட்ஸ் அணியவும் விரும்பவில்லை. சிறையிலும் வாடிய முடி சூடா பாரத மன்னன் கதர்புடவை அணிந்து துவிச்சக்கர வண்டியிலேயே பிரயாணம் செய்வார். இங்ஙியிலேதான் கொலையும் செய்யப்பட்டார்! துப்பாக்கி முனைக்கஞ்சாத வேந்தன் காதிஜீ கொலைகாரன் சுட்டுக் கொல்ல வந்தபோதும் அஞ்சினரா? இல்லவேயில்லை. பாரத மாதாவின் மடியிலே 2-10-1869-ல் ஒரு நாள் குழந்தையாக அழுத பெரியார் காந்திஜீ 30-1-1948-ல் இறைவனடி எய்தினர். இன்றும் பாரதத்திலும் ஈழத்திலும் மற்றுமுலகெங்கும் காந்திஜீ ஞாபகார்த்தப்படுகிறார்.

அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியின் பெயர் ஜோர்ஜ் வாஷிங்டனகும்; சூயஸ் கால்வாயை வெட்டுவதற்கு பிரெஞ்சுக்காரர்கள் ஆரம்பித்த கமபெனியின் பெயர் 'கம்பெனி யூனிவர்ஸல் டு கனல்மாரிடைம் டி சூயஸ்' ஆகும்.

-பி. ரி. தேவராஜா, கற்கோவளம்.

# கடற்படையிடம் கச்சேரி தோல்வி

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் அரசாங்க ஊழியர் உதைபந்தாட்டச் சங்க சுற்றுப்போட்டி அமைப்பின் கீழ் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 'ஏ' பிரிவைச் சேர்ந்த கச்சேரிக் கோஷ்டிக்கும், கடற்படைக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற ஆட்டத்தில் கடற்படைக் கோஷ்டி கச்சேரிக் கோஷ்டியைத் தோற்கடித்தது.

கச்சேரிக்கோஷ்டி ஒரு கோலும் கடற்படைக்கோஷ்டி 3 கோல்களும் போட்டுக்கொண்டன.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்திற்கு திரு. இசற். சிங்கராயர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இந்தச் சுற்றுப்போட்டி அமைப்பில் 'பி' பிரிவுக் கோஷ்டிகளாகச் சுகாதார இலாகாக் கோஷ்டிக்கும் மாநகரசபைக் கோஷ்டிக்குமிடையே நடைபெறவிருந்த ஆட்டத்தில் சுகாதார இலாகா கோஷ்டி மாநகரசபைக் கோஷ்டிக்கு [illegible] வெற்றியை வழங்கியது. இதனால் மாநகரசபைக் கோஷ்டிக்கு வெற்றி வழங்கப்பட்டிருக்கிறது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

**செவ்வாய் 29-1-63**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை: 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல்: 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை: 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 பாங்கு, 6-30 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு: 7-00 நேயர் விருப்பம், 7-30 சாரதா நவரத்தினம் லலிதா நவரத்தினம்—பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 இசைச் சித்திரம், 9-45 வி. சுப்பிரமணியம்—நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை: 6-45 மங்கள இசை 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-35 எஸ். வேணுகோபால்—பாட்டு.

பகல்: 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை: 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-30 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு: 7-30 பொருளாதாரப் புதிர்—பேச்சு, 7-45 திருவெண்காடு பி. சுப்பிரமணியபிள்ளை நாகஸ்வரம், 9-15 மெல்லிசை, 9-30 'தாலி பாக்கியம்'—சிறுகதை, 9-45 கடமையின் குரல்—பேச்சு,

## நிர்வாகிகள் தெரிவு

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன்துறை, மாங்கொல்லை வாசிகசாலையின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

போஷகர்: திரு. க. வயித்திலிங்கம், தலைவர். திரு. ஆ. பாலசுப்பிரமணியம், காரியதரிசி: திரு, சு. சிவஞானம், தனாதிகாரி: திரு. க. ஜெயராசா.

12 பேர் கொண்ட ஒரு நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது. ! 10,

## கீரிமலை சிவன்கோயில் மகோற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

புராதனப் பெருமை வாய்ந்த கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தை மிகவும் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

அடுத்த மாதம் 9-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் இவ்வாலய உற்சவங்கள் மகாசிவராத்திரி தீர்த்தத்துடன் பூர்த்தியடையும். ஏழாம் நாள் சந்திர சேகரப் பட்ட உற்சவமும், பத்தாம் நாள் புஷ்பவிமானக் காட்சியும், பதினொராம் நாள் கைலாச வாகனக் காட்சியும், பன்னிரண்டாம் நாள் திருக்கல்யாணமும் புஷ்பபல்லக்குக் காட்சிரும் பதினன்காம் நாள் இரதோற்சவமும், அன்றிரவு மகாசிவராத்திரி விழாவும், மறு நாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

உற்சவ நாட்களில் முத்தமிழ்-மணி எம். எஸ். எஸ். மணி பாகவதர் சங்கீதகதாப் பிரசங்கம் நிகழ்த்த ஏற்பாடாகியுள்ளது என்றும் தெரிகிறது.

## நாய்களின் தொல்லை: மாணவர்கள் அச்சம்

மாவிட்டபுரம், செவ்வாய்

காங்கேசன்துறை, தெல்லிப்பழை, மயிலிட்டி ஆகிய இடங்களில் திரியும் கட்டாக்காலி நாய்களினால் பாடசாலை மாணவ மாணவிகள் பாடசாலைக்குச் செல்ல அஞ்சுகிறார்கள் இந்தக்கட்டாக்காலி நாய்களினால் பெரும்பாலானவை விசர்பிடித்து திரிகின்றன.

காங்கேசன்துறை பட்டின சபை எல்லைக்குள் இருந்த கட்டாக்காலி நாய்களில் பெரும்பாலானவை கடந்த வியாழக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டன.

கடந்த சில தினங்களாக மயிலிட்டி, தெல்லிப்பழை கிராமசபை எல்லைக்குள் விசர் நாய்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. தெல்லிப்பழை கிராமசபையும் தனது மாதாந்தக் கூட்டத்தில் கட்டாக்காலி நாய்களை சுடுவதென்று ஏகமனதாக முடிவு செய்துள்ளது.

இம்மாதத்தில் நூற்றுக்கு மதிகமானோர் நாய்கடிக்குள்ளாகி இருக்கிறார்கள். காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் தற்போது சிகிச்சை பெறுபவர்களில் நாய்கடிக்கு இலக்கானவர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர்.

இருவாரங்களுக்குமுன் காங்கேசன்துறை பிரதான வீதியில் விசர்நாயினால் கடிக்கப்பட்டு ஏற்புவலிக்கு உள்ளான பசுமாடு ஒன்று இறந்த நிலையில் பலதினங்களாக கவனிப்பாரற்று கிடந்தமையே நாய்கள் விசர்பிடித்து திரிவதற்குக் காரணமென்று தெரியவருகிறது.

## 400 விவசாய நிபுணர்கள்

மாஸ்கோ, ஜன. 28

கியூபா அரசாங்கத்தின் கோரிக்கைக்கிணங்க கியூபாவில் நவீனமுறையில் விவசாயத்தை அபிவிருத்திசெய்வதற்காக 400 சோவியத் தொழில்நுட்ப நிபுணர்கள் கியூபாவிற்குச் செல்லவிருக்கின்றனர். இதற்கான ஒப்பந்தம் ஒன்று நேற்று ஹவானாவில் கைச்சாத்திடப்பட்டது. இந்த நிபுணர்கள் கியூபாவில் ஒருவருடகாலம் தங்கியிருப்பர்.

ஓவியர் கண்ட யால வனம்




எங்கு சென்றாலும்

நன்றாய்ச் செல்க

ஷெல்லிற் செல்க

யால காவல் வனம்-ஏராளமான வன விலங்குகள், கண் கவர் காட்சி நிறைந்த நில வெளிகள் ஆகியவற்றைக் கொண்டு, அதிப்ரபல்யமான இயற்கை வனமாக விளங்குகிறது. அங்கு, காரில் வெகு சுலபமாகச் செல்லலாம். கொழும்பிலிருந்து சுமார் 200 மைல் தூரத்திலுள்ள இந்த வனத்தை, ஒரு நடுத்தரக் காரில், 7 கலனுக்கும் கொஞ்சம் கூடுதலான அளவு பெட்ரோல் நிரப்பி, 7 மணி நேரத்திற் சென்றடையலாம்.

யால காவல் வனத்திற்கு உல்லாசப் பிரயாணம் செய்வது குதூகலம் மிகுந்த ஓர் அனுபவம். யானைகள், மான்கள், சிறுத்தைகள், கரடிகள் ஆதியனவும் மற்றும், ஏராளமான வன விலங்குகளும், இயற்கையான சூழலில் தம் இஷ்டம் போலத் திரிந்து, துள்ளாட்டமாடி உங்களை வசீகரிக்கும்; லாவண்யமான, செழித்த உஷ்ண மண்டல வனம் உங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும்.

அடுத்த வார இறுதியில் நீங்கள் யால வனத்துக்குப் போகத் திட்டமிட்டாலென்ன? ஷெல்லில் நீங்கள் வெகு நன்றாய்ச் செல்லலாம். வழி நெடுகிலும் உள்ள ஷெல் பெட்ரோல் நிலைய விற்பனையாளர்கள், உங்கள் பிரயாணம் மகிழ்ச்சிகரமானதாக அமைய உதவி செய்வார்கள். ஐ. சீ. ஏ. கலந்த சுப்பர் ஷெல், ஐ. சீ. ஏ. கலந்த ஷெல், ஷெல் X - 100 மோட்டார் எண்ணெய் ரகங்கள் (மல்டி கிரேட், கிரமமான ரகங்கள்) ஆகிய உச்ச தராதரமுள்ள பொருட்களை வழங்க அவர்கள் வசதியும் வல்லமையுமுள்ளவர்களாயிருக்கிறார்கள். சிறப்பான சேவையைத் துரிதமாக அளிக்க அவர்களின் ஊழியர்கள் பயின்றிருக்கிறார்கள்.

மறவாதீர்கள்! ஷெல் பெட்ரோல் ரகங்களிலேதான் உங்கள் கார் உச்ச சக்தியை நிச்சயமாக வழங்கச் செய்யக் கூடிய ஆச்சரியகரமான ஐ. சீ. ஏ. கூட்டுப் பொருள் உண்டு. நீங்கள் எங்கு சென்றாலும்.......... நன்றாய்ச் செல்க.......... ஷெல்லிற் செல்க.

ஷெல்லை நீங்கள் நிச்சயம் நம்பலாம். SHELL

மொழிப்பிரச்னை

# வட்டமேசை மகாநாடுகூட அரசாங்க எம். பி. யோசனை

அநுராதபுரம், திங்கள்

"இலங்கை—இந்தியப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எவ்வளவு பாடுபட்டு வருகிறது என்பதை மக்கள் உணருவார்கள். இப்பிரச்னையை தீர்ப்பதற்கான ஆலோசனைகளைக்கூறுமாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்காவைப் பிரதமர் கேட்டிருக்கிறார். மொழிப் பிரச்னையும் அதிமுக்கியமானதாகும். இதைத் தீர்க்கும்பொருட்டு சகல கட்சித் தலைவர்களைக் கொண்ட வட்டமேசை மகாநாடு ஒன்றைக் கூட்டும்படி அடுத்த அரசாங்க பார்லிமெண்டரிக் கூட்டத்தில் நான் கேட்டுக்கொள்வேன்." இவ்வாறு இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய திரு. கே. பி. ரத்னாயக்கா, எம். பி. குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இச்சிறிய இலங்கைத்தீவிலே மக்களின் ஒருபகுதியினர் துன்பத்துடன் வாழுவது நீதியாகாது. அப்படி ஒரு சாரார் துயரத்துடன் வாழநேரிட்டால் அதனால் நாட்டின் முன்னேற்றத்துக்குப் பங்கம் ஏற்படும். நீதியான முறையில் தமது அபிப்பிராயங்களைத் தெரிவித்தால் நாட்டின் பிரச்னைகளைச் சுலபமாகத் தீர்த்துக்கொள்ளலாம். நாட்டில் பிரிவினையை எக்காரணம்கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது.

## அப்போதிகரிகளுக்கு தகுதி நிர்ணயப்பரீட்சை

கொழும்பு, திங்கள்

அரசாங்க அப்போதிக்கரிகளுக்கு முதல் முதலாக தகுதி நிர்ணயப் பரீட்சை நடைபெறவிருக்கிறதாகத் தெரிகிறது. அப்போதிக்கரிகளுக்கு இப்பரீட்சை நடத்துவதற்கான திட்டம் ஒன்றை சுகாதார டைரக்டர் வகுத்துள்ளார்.

சுகாதார டைரக்டர் வகுத்துள்ள திட்டப்படி இத்தகுதிப் பரீட்சை எழுத்துப் பரீட்சை, வாய்மொழிப் பரீட்சை ஆகிய இரு பகுதிகளைக்கொண்டதாகவிருக்கும்.

இரண்டாம் தரமுடைய அரசாங்க அப்போதிகக்ரிகள் ரூ. 2,340, ரூ. 3,060 ஆகிய இரு சம்பளத்திற்கு தகுதியுடையவர்களாகும்போது அவர்கள் தகுதிப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். முதலாம் தர அப்போதிகர்கள் ரூ. 5160 சம்பளத்திற்கு தகுதியுடையவர்களாகும் போது இப்பரீட்சைக்குத் தேற்ற வேண்டும்.

## கிறிஸ்தவ மாணவ இயக்கம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கண்டி டிரினிட்டி கல்லூரி ஆசிரியர் திரு. எஸ். சுகுணனந்தன் இலங்கை கிறிஸ்தவ மாணவ இயக்கத்தின் பொதுக்காரியதரிசியாக கடந்த முதலாம் திகதியிலிருந்து பொறுப்பேற்றுள்ளார். கண்டி உயர் தர பெண்கள் பாடசாலையில் முன்னாள் தலைமை ஆசிரியை செல்வி கிரேஸ் ஜே. போல் இலங்கை பெண்கள் கிறிஸதவ இயக்கத்தின் பொதுக் காரியதரிசியாகக் கடமையேற்றுள்ளார்.

## புத்தகக்கண்காட்சி

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் கவுன்சிலின் ஆதரவில் யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. கட்டடத்தில் அடுத்த மாதம் 3-ம் திகதி தொடக்கம் 9-ம் திகதிவரைபுத்தகக் கண்காட்சி ஒன்று நடைபெறவிருக்கி

## விவேகானந்தர் நூற்றுண்டு விழா

கொழும்பு, திங்கள்

கொழும்பு விவேகானந்த சபை ஆதரவிற் சபை மண்டபத்தில் சுவாமி விவேகானந்தரின் நூற்றுண்டு ஜயந்தி விழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கிறது. சுவாமி பிரேமத்மானந்தாஜி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கொழும்பு மேயர் திரு. வி. ஏ. சுகததாசா, சேர் கந்தையா வைத்தியநாதன், திரு. வி. ஏ கந்தையா, திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை ஆகியோர் விவேகானந்தரைப்பற்றி உரை நிகழ்த்துவர். இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும்.

## என்ஜினியர் அப்பீல் செய்வார்?

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் மாநகரசபை மின்சார இலாகா அலுவலகத்திற்குள் பிரவேசிப்பதற்கும் மின்சார ஊழியர்களுக்கு உத்தரவு பிறப்பிப்பதற்கும் மற்றும் மின்சார என்ஜினியர்கள் என்ற முறையில் அலுவல்களைச் செய்யக்கூடாதென்றும் மாநகரசபையின் கோரிக்கை மீது அடிஷனல் மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் முன்னர் பிறப்பித்த இடைக்காலத் தடை உத்தரவு, இவ்விஷயம் இறுதியாகத் தீர்மானிக்கப்படும்வரை அமுலில் இருக்கும் என்று அடிஷனல் மாவட்ட நீதிபதி அளித்த தீர்ப்பை ஆட்சேபித்து என்ஜினியர் என். நாகேந்திரம் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யவிருப்பதாகத் தெரிகிறது.

## அரசாங்கம் கடன்பட்ட தொகை ரூ. 19 கோடி

கொழும்பு, திங்கள்

நிதி அமைச்சு தொகுத்துள்ள புள்ளிவிபரங்களின்படி 1961-62 நிதி வருடத்தில் அரசாங்கம் 19 கோடி ரூபாவுக்கு மேல் கடன்பட்டிருக்கிறது. 1961-ல் நிதி அமைச்சராயிருந்த திரு. பீலிக்ஸ பண்டாரநாயகா அப்போதைய தமது வரவு செலவுத்திட்டத்தில் தெரிவித்திருந்த தொகைக்கு இரண்டு கோடி ரூபா இது மேலதிகமாயிருக்கிறது.

## ஐயாறன்

(4ம் பககத் தொடர்ச்சி)

விலேயே உயிர் நீத்தார். இப்பெரியாரின் ஞாபகத்துக்கு, முஸ்லிம்கள் மட்டுமின்றி, இந்துக்களும் தாராளமாக உதவ வேண்டுமென்றே இதை எழுதுகிறேன். பணம் அனுப்ப விரும்புபவர்கள், அல்ஹாஜ் டி. பி. ஜாயா ஞாபகார்த்த நிதி பொக்கிஷதார் ஏ. ரஹிமான், 29 2/14 கபூர் பில்டிங்ஸ் கொழும்பு 1 என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கலாம்.

## கிராமசேவையாளர் பயிற்சி

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கிராமசேவையாளராகப் பயிற்சிபெறத தெரிவுசெய்யப்பட்டவர்களில் நால்வர் பல்வேறு காரணங்களால் அப்பயிற்சிக்குச் செல்லமுடியாதென அறிவித்திருக்கிறார்களெனத் தெரிகிறது.

இந்தக் காலிஸ்தானங்கள் வருகிற மாதத்தில் நிரப்பப்படவிருக்கிறது. இவர்களுக்கான பயிற்சி பெப்ரவரி முதல் தேதியில் ஆரம்பமாகவிருப்பது தெரிந்ததே.

# 'கையைக் காட்டி வேடிக்கை செய்ததால் கம்பத்தில் மோதினர்'

## மரணவிசாரணையில் சாட்சியம்

மாவிட்டபுரம், திங்கள்

மோட்டார் பஸ் ஒன்றில் உல்லாசப்பிரயாணம் செய்த வவனியா விவசாயப் பாடசாலை மாணவரான கதிரவேலுப்பிள்ளை விஷ்ணுகாந்தன் (21 வயது) சேர்ந்தான் குளத்துக்கருகில் தந்திக் கம்பத்துடன் மோதி மரணமடைந்தது சம்பந்தமாக மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி' தாமோதரம் முன்னிலையில் தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில் வவனியா விவசாயப் பாடசாலை மாணவரான மரியான் சூசை சாட்சியமளித்தார். அவர் தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

இம் மாதம் 20-ம் திகதி நானும் காலஞ்சென்றவரும் உட்பட 30 பேர் வவனியாவில் இருந்து உல்லாசப்பிரயாணம் செய்ய பஸ்ஸில்புறப்பட்டோம். கீரிமலைக்கும் சேந்தான் குழத்துக்குமிடையே பஸ போய்க்கொண்டிருந்தது காலஞ்சென்றவர்பஸவண்டியின் வலதுபக்கத்தில் உள்ள ஆசனங்களில் சடைசிக்கு முன்னுள்ள ஆசனத்திலிருந்தார். நான் அவருக்குப் பின்னலிருந்தேன். நாம் பிரயாணம்செய்த பஸ் கார் ஒன்றினை விலத்தவேண்டி வந்தது. அக் காரினுள் பெண்கள் பிரயாணஞ்செய்தனர் அவர்கள் எம்மை நோக்கிக் கைகாட்டினர் நாமும் பதிலுக்குக்கைகாட்டினோம். பஸ காரை விலத்தியதும் காலஞ்சென்றவர் வெளியே எட்டிப்பார்த்து கையை காட்டினர். அப்போது அவர் உடலின் பெரும்பாகம் வெளியேயிருந்தது பஸ்சுக்குப் பின்னலும் பார்த்துக் கைதட்டினர். பஸ சென்றுகொண்டிருந்தபாதையின் வலது புறத்தில் தந்திக் கம்பங்கள் இருந்தன. காலஞ்சென்றவர் கையைக் காட்டிக்கொண்டிருக்கும் போது இவரின் தலை தந்திக் கம்பத்துடன் மோதியது. அப்போது இவருடைய உடல் தொங்கிக்கொண்டிருந்தது. நானும் இன்னொருவரும் அவரைப் பிடித்துக்கொண்டு பஸ்ஸை நிற்பாட்டும்படி சத்தமிட்டோம். பஸ் நிறுத்தப்பட்டது. பின் அவர் மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவர் அங்கு இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விவசாயப் பாடசாலை தமிழ் விரிவுரையாளர் திரு. பொ. வேலாயுதபிள்ளை சாட்சியமளித்தார். நீதிபதி மேல் விசாரணையை அடுத்த மாதம் 8-ம் திகதிக்கு ஒத்திவைத்து சாரதி மொடிக்கே கர்னேலிசை பழைய பிணை 1000 ரூபாவில் செல்ல அனுமதித்தார்.

## குடியேற்றம்

மன்னார் மாவட்டத்தில் குடியேற்றத் திட்டமொன்று ஆரம்பித்திருக்கிறோம். முக்கியமாக இளைப்பாறிய உத்தியோகத்தருக்கும் எஸ். எஸ். ஸியில் சித்திபெற்று வேலையில்லாதிருக்கும் இளைஞருக்குமாக. விரும்புவோர் விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

670 C/ஈழநாடு

# இலங்கையில் முட்டை உற்பத்தி

## சுயதேவை பூர்த்தியாகும் நிலை

கொழும்பு, புதன்

காணி விவசாய அமைச்சு வெளியிட்ட ஓர் அறிக்கைப்படி இலங்கைக்குத் தேவையான அளவு முட்டை இலங்கையிலேயே முழுவதும் பெறக்கூடியதொரு நிலை ஏற்பட்டு வருகிறது. கடந்த சிலகாலமாக வருஷத்தில் 70 லட்சம் தொடக்கம் 3 கோடி முட்டைகள் வரை காலத்திற்குக்காலம் வெளிநாடுகளிலிருந்து இங்கு இறக்குமதியாகிவந்திருக்கிறது இன்று இத்துறையில் தனது தேவையைத் தானே பூர்த்தி செய்துகொள்ளும் ஓர் அபிவிருத்தியை நாடு கண்டிருப்பதாக அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது. சென்ற இரண்டு மாதகாலத்தில் வெளிநாடுகளிலிருந்து முட்டை இறக்குமதி செய்வது அறவேநிறுத்தப்பட்டிருக்கிறதென்றும் அதன் பேரில் லட்சக்கணக்கான ரூபா வெளியே போவதும் நின்றுவிட்டதெனவும் அறிக்கை தெத்வித்துள்ளது.

**SCHOOL OF TECHNOLOGY**
CHUNDIKULI, JAFFNA.

**Course in Electrical Installation Work**

Intensive instruction, both theory and practical, provided by qualified Electrical Engineer, for one year. Students who have reached the J. S. C. Standard can successfully complete this course and become competent Electricians.

Trained Electricians have good chances of employment.

There are vacancies in the class just commenced. No admission after 1st February, for the 1963 class.

Apply Immediately.

A. A. COOKE
*Director*

**விரைவில் எதிர்பாருங்கள்!**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்!



சிவாஜி கணேசன் - பத்மினி
மற்றும் பலர் நடிக்கும்
**புனர்ஜென்மம்**
திரைக்கதை–வசனம் ஸ்ரீதர் | டைரக்ஷன் ஆர்.எஸ்.மணி | இசை டி.சலபதிராவ்

**இப்பொழுது நடைபெறுகிறது!**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (அம்பாறை) விஜயா (மட்டக்களப்
எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி, ராகினி
மற்றும் பலர் நடித்த
**ராணி சம்யுக்தா**
பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன் | டைரக்ஷன் டி. யோகானந்

**வெலிங்டன்**
(யாழ்ப்பாணம்)
சவுக்கடி சந்திரகாந்தா

**மனோகரா**
(யாழபபாணம்)
சிவாஜி, ஜெமினி கணேசன், சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
**பாசமலர்**

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.